Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம்10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (21-7-66) இதழ் 161

பராபவ ஆடி 5 ரபி: ஆகி 2 வியாழக்கிழமை

## 9 தினங்களாகியும் மீனவர்களைக் காணவில்லை!

வல்வெட்டித்துறை, புதன்

ஆழ்கடலில் மீன் பிடிக்கச்சென்ற மீனவர்கள் மூவர் ஒன்பது தினங்களாகியும் இன்னமும் கரைவந்து சேரவில்லை. கே. தங்கராசா, வி.இரத்தினவடிவேல், ஈ. பகவதிசிங் ஆகிய இந்த மூவரும் வல்வெட்டித்துறைக் கரையிலிருந்து யந்திரப் படகொன்றில் மீன்பிடிப்பதற்காகச் சென்றிருந்தனர்.

மீனவர்கள் மூவரும் திரும்பி வராததால் இங்கு பெருத்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக பருத்தித்துறை எம. பி. திரு. க. துரைரத்தினத்திடம் முறையிட்டதைத் தொடர்ந்து இவர்களைத் தேடுவதற்கான நடவடிக்கைகளை எம். பி. மேற்கொண்டுள்ளார்.

சௌனட் சபை

# தி. மு. க. - தமிழரசு தொடர்பு கிடையாது

## பல இனங்கள் வாழும் நாட்டில் சமஷ்டிதான் பரிகாரம்

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டுகளுக்கு அமைச்சர் திருச்செல்வம் பதில்

கொழும்பு, புதன்

"நாங்கள் இலங்கைப் பிரஜைகள். எப்பொழுதுமே இலங்கைப் பிரஜைகளாகத்தான் இருப்போம். எமது சமஷ்டி ஆட்சி கோரிக்கையை வைத்துக்கொண்டு தமிழரசுக் கட்சிக்கு வேறொரு நாட்டுடன் அல்லது இந்திய திராவிடமுன்னேற்றக் கழகத்துடன் தொடர்பு உண்டுஎன்றுகூறுவதில் அர்த்தமில்லை. பல்வேறுஇனங்கள் வாழும் நாட்டில் எழும் பிரச்னைகளுக்கு சமஷ்டி ஆட்சியின்மூலம் தான் சிறப்பான பரிகாரங்களைக் காணமுடியும் என்று தமிழரசுக்கட்சி நம்புகிறது. இதனை நம்நாட்டில் பெரும்பான்மையினரான சிங்களமக்களின் நல்லெண்ணத்துடன் சாதிக்கமுடியும்.

இவ்வாறு இன்று செனட்சபையில் உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வம் சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணைமீது பேசும்போது கூறினர்.

செனட்டர் திருச்செல்வம் தொடர்ந்து பேசும்போது "திரு. பொன்னம்பலத்துக்கும் எனக்கும் பல கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனல் சீர்குலைவு சக்திகளிடமிருந்து தேசிய அரசாங்கத்தைக் காப்பாற்றுவதில் இருவரும் ஒருமித்துநின்கின்ரேம்'' என்ருர்.

### எல்லாளனுக்கு ஒரு இடம்

சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் எல்லாளமன்னனுக்கும் ஒரு இடம் கொடுக்கப்பட்டதன் மூலம் எந்த சமூகத்துக்கும் அரசாங்கம் அநீதி விளைவித்துவிட்டது என்று சொல்வது பிழையாகும். தமிழ் மக்கள் இந்த நாட்டில் தொடர்ந்தும் பிரஜைகளாக வாழ விரும்புகிருர்கள் என்பதுதான் உண்மைநிலைமையாகுமென்று அவர் மேலும் கூறினர்.

### பிரதமரின் விஜயம்

கல்முனையில் தமிழரசுக் கட்சியின் மகாநாட்டுக்கு பிரதம மந்திரி விஜயம்செய்தது குறித்து செனட்டர் திருச்செல்வம் குறிப்பிட்டு பேசும்போது, பிரதமரை வரவேற்பதற்காகவும் தமிழரசுக்கட்சியின் இதர பந்தல்களிலும் நாட்டின் தேசியக்கொடி பறந்து கொண்டிருந்தது என்று குறிப்பிட்டார்.

### ஐக்கியத்தின் எதிரி

தேசிய ஐக்கியத்துக்குஎதிரியாக இருக்கும் ஒரேமுஸ்லிம் செனட்டர் அசீஸ்தான்.எதிர்க்கட்சியினர் எப்போதுமே தமிழரசுக்கட்சியைத்தாக்கி வந்துள்ளார்கள்என்றுஅவர் குறிப்பிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வங்கி ஊழியர் இன்று வேலைக்குத் திரும்புவர்

### எல். பி. டி. சில்வா கமிஷனராக நியமனம்

கொழும்பு, வியாழன்

பதினைந்து தினங்களாக வேலைநிறுத்தம் செய்த வங்கி ஊழியர் அனைவரும் இன்று வியாழக்கிழமை காலை வேலைக்குத் திரும்புவர். வேலை நிறுத்தத்தைத் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதென்று வங்கி ஊழியர் யூனியன் நிர்வாகசபையும் பொதுச்சபையும் தீர்மானித்தன.

வங்கிஊழியர் நியமனம், பதவிஉயர்வு சம்பந்தமான பிரச்னைகளை விசாரணைசெய்வதற்கு ரோயல்கமிஷன் ஒன்றை நியமிக்கவேண்டும் என்ற யோசனையை வங்கி ஊழியர் யூனியன்ஏற்றுக்கொண்டு, வேலை நிறுத்தத்தைக்கைவிடச் சம்மதித்தது.

### மேலதிகநேர வேலை

வங்கி ஊழியர்கள் இன்று வேலைக்குத் திரும்பியபின் இதுவரை தேங்கிக் கிடந்த வேலைகளைச்செய்துமுடிக்கும் பொருட்டு அவர்கள் மேலதிகநேரவேலைசெய்ய வேண்டியிருக்குமென்றும் நேஷனல் கிரின்லேய்ஸ்வங்கிஊழியர் மேலும் பல தினங்களுக்கு மேலதிகநேர வேலை செய்யவேண்டியிருக்குமென்றும் வங்கிநிர்வாகிகளில் ஒருவர் தெரிவித்தார்.

''வங்கிப்பிரச்னையில் சுமுக முடிவு ஏற்படவில்லையாயினும் நாட்டின் நலன் கருதி நாம் வேலைக்குத் திரும்புகிரேம்'' என்று வங்கி ஊழியர் யூனியன் தலைவர் கூறினர்.

### கமிஷனர்

ரோயல் கமிஷன் எனப்படும் தனிநபர் விசாரணை கமிஷனுக்கு திரு.எல்.பி.டி. சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

## உல்லாச பிரயாண கூட்டுத்தாபன தலைவர் ராஜினமாச் செய்வார்?

கொழும்பு, புதன்

உல்லாசப் பிரயாணத்துக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு நிறுவப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் டைரக்டர் ஜெனரலாகப் பதவியேற்ற திரு. எரிக் அலுவிஹாரை தமது பதவியை ராஜினமாச் செய்யவிருக்கிருர்.

இந்தக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்ட மூன்று மாதங்களுக்குள் அவர் தம் ராஜினமாவைச் சமர்ப்பிக்கவிருக்கிருர். முன்பு ஒலிபரப்புப் பகுதி டைரக்டர் ஜெனரலாக இருந்த எரிக் அலுவிஹாரை மீண்டும் நிர்வாக சேவைக்குச் செல்வார்.

## ஜி. ஜி. மீண்டும் ஐ. நா. செல்வார்

கொழும்பு, புதன்

ஐக்கியநாடுகளின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு இலங்கையிலிருந்து செல்லும் குழுவிற்கு யாழ்ப்பாண எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மீண்டும் தலைமைதாங்குவார்.

ஐக்கியநாடுகளின்பொதுச்சபைக் கூட்டம் செப்டம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாகும். கடந்தவருடமும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், இலங்கைக் குழுவிற்குத் தலைமைதாங்கிச் சென்ருர்.

## அமெரிக்கருக்கு தொண்டமான் விடுத்துள்ள வேண்டுகோள்

### பிரதிநிதிகள் சபையில் சுவையான தகவல்

கொழும்பு, புதன்

ஒரு நாளைக்கு ஒரு கோப்பை தேனீர் அருந்தி ஒரு சதத்தை அதிகமாக செலவு செய்யுங்கள் என்று தாம் அமெரிக்காவில் இருந்த போது சந்தித்த எல்லா அமெரிக்கரிடமும் கூறியதாக தொண்டமான் எம். பி. இன்று பிரதிநிதிகள் சபையில் பேசுகையில் கூறினர்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும்

(8-ம் பக்கம் பார்க்க)

## கடலில்செல்லவேண்டாமென்று மீனவர்களுக்கு எச்சரிக்கை

மாவிட்டபுரம், புதன்

கடலில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாமென்று கரையோரப் பகுதி மீனவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் தெற்கு, தென் மேற்குக் கரையோரப் பகுதிகளிலும் கடுமையான காற்றுடன் மழை பெய்யலாமென்றும் [illegible] கரையோரப்பகுதி பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைக்கப்பெற்ற அவசரச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிஸார் இன்று 'ஜீப்' ஒலிபெருக்கிமூலம் மீனவர்களுக்கு எச்சரிக்கைவிடுத்தனர்.

இங்கு அடுத்த சிலதினங்களில் காலநிலை மோசமாகலாமென்றும் கரையோரப் பகுதிகளில் கடுமையான காற்றுடன் மழைபெய்யலாமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

## தீர்த்தோற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் இன்று காலை 8மணிக்கு பூஜையும் வீதி வலமும் தீர்த்தோற்சவமும் பகல் 12 மணிக்கு மகாபிஷேகமும் அபிஷேகமும் நடைபெறும். இரவு 6-30க்கு பூரகர்மபூஜையும், இரவு 7½மணிக்கு வசந்த மண்டப பூஜையும், இரவு 7-45க்கு துவஜஅவரோகணமும் வீதி வலமும் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

**தச்சுத்தொழிலாளர்**

தளபாடத் தொழிற்சாலைக்கு தேர்ச்சி பெற்ற தச்சுத்தொழிலாளர் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ விக்னேஸ்வரா தளபாடத் தொழிற்சாலை, புகையிரத நிலைய வீதி, மல்லாகம். 778

**மனேஜர், ஸ்டோர்கீப்பர்...**

மனேச்சர், ஸ்டோர்கீப்பர், வேலை மேற்பார்வையாளரும். காடு அழிப்பதற்கும், மரம் அரிவதற்கும் கொன்ருக்டர்களும் தேவை. விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும். இஞ்சினியறிங் பவர் யூனிற், 2-ம் மாடி சங்கரப்பிள்ளை கட்டிடம், ஆஸ்பத்திரிவீதி. யாழ்ப்பாணம். 775

**பணம்:**

யாழ்ப்பாணத்தில் இறக்குமதிக்கோட்டாக்கள் உள்ள ஓர் ஸ்தாபனத்திற்கு ரூபா 1500. தேவை. லாபத்தில் பங்குதரலாம். அல்லது நியாயமான வட்டிதரலாம். வியாபாரம் நடக்கும் கடைகள் பொறுப்பாகக் கொடுக்கப்படும். விபரத்திற்குக் கடிதமூலம்தொடர்புகொள்ளவும். வி. இல. 776, 'ஈழநாடு' மேற்பார்த்து என்ற விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 776

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு நீரந்தி முதலிய வை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

**வியாபார ஸ்தாபனம்**

சாவகச்சேரி-கண்டி வீதியில் தெய்வேந்திரா தியேட்டருக்கு முன்பாக, வசதியான பெரிய பலசரக்கு வியாபார ஸ்தாபனம் சகல தளபாடங்களுடனும் கமிஷனுக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: ச. நவரத்தினம், தேநீர்க்கடை, பஸ் ஸ்டாண்ட், கொடிகாமம். 761

**மாணவ ஆசிரியர்**

மேற்படி பரீட்சையின் விண்ணப்பப் படிவத்திற்கு 10 சத முத்திரை 5 ஐ அனுப்பி பெற்றுக் கொள்ளவும். புதிய தமிழ் தட்டச்சு யந்திரங்களும் விற்பனைக்குஉண்டு. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 769

**காணி**

10 பரப்பு கட்டடம் கட்டக்கூடிய நல்ல காணி 'மாதர் ஒழுங்கை' மானிப்பாயில் உண்டு. விபரங்கட்கு - மாதர் 110 மெயின் வீதி, யாழ்ப்பாணம். 751

**காணி;**

ஆனந்தன் வடலி வீதி. செம்மணி றோட் சந்திப்பில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு மேற்படி விலாசத்தில் க. சின்னத்தம்பியுடன் தொடர்பு கொள்ளவும். 772


**REGAL—JAFFNA**
NOW SHOWING
ALBERT FINNEY
in
**NIGHT MUST FALL**
(MGM's Suspense Thriller)
( ADULTS ONLY )


## கணேசபுரம் கொலைவழக்கு விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியா.

கிளிநொச்சி கணேசபுரம் கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது, முக்கிய சாட்சியொருவர் வராததால் அடுத்த பருவகால விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் கடந்தவருடம் பெப்ரவரிமாதம் 24ம் திகதி இரவு இராசன்ஜேக்கப் என்பவரைக் கொலை செய்ததாக சுந்தரம் தியாகராசா, பக்கிரிசாமி சின்னையா ஆகியஇருவர்மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது, முக்கிய சாட்சியான பேரின்பநாதர் பிலேமினு பிரசவம் காரணமாக வரவில்லை என்றுதெரிவிக்கப்பட்டது. இதன்பின் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகள்சார்பில் அட்வக்கேட் கே. வி. எஸ் சண்முகநாதன், புறக்டர் தலையசிங்கம் யோகநாதன் அனுசரணையுடன் ஆஜராஞர். முடிக்குரிய வழக்கறிஞர் கே.டி.டி. எஸ். அபயசிங்கா.

## 'வல்வெட்டித்துறையிலிருந்து இராணுவத்தை அகற்றுக!'

வல்வெட்டித்துறை. புதன்

வல்வெட்டித்துறையிலிருந்து இராணுவமுகாமை உடனடியாக அகற்றிவிடுமாறு கோரி பிரதமருக்கும், ராஜாங்க அமைச்சருக்கும் வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தினர்மகஜர்ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

வல்வெட்டித்துறை சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்தே இந்த மகஜர் அனுப்பிவைக்கப்பட்டது.

இப்பகுதி மக்கள் இராணுவத்தினரின் அட்டகாசமும், கொடுமையும் தாங்கமுடியாது சிறைக்கைதிகள் போன்று வாழ்வு நடாத்தி வருவதாக இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம், தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு இம்மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## "நெசவுத் தொழில் மூலம் பொருளாதாரத்தைப் பெருக்கலாம்"

கனகராயன்குளம், புதன்

"வன்னிப்பகுதிமக்கள்எத்தனையோ வழிகளில் முன்னேறுவதற்கு இயற்கை வளம் செறிந்திருக்கின்றது. அப்படியிருந்தும் எத்தனையோ மக்கள் சுறுசுறுப்பற்றுத் திரிவதை நான் பார்த்திருக்கிறேன். இங்கு காணப்படும் வவனிக்குளத் திட்டத்தில், எத்தனையோ பெண்கள் தங்கள் சீவியத்தைக் கொண்டு நடாத்த முடியாதிருக்கின்றனர். இப்படியான நெசவாலைகளை நிறுவுவதன்மூலம் பெண்கள் தங்கள் வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவதோடு நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்கவும் முடியும்" என்று வவனிக்குளம் இரண்டாம்யூனிற் கிராமமுன்னேற்றச்சங்கத்தினரால் புதிதாக அமைக்க உத்தேசித்த நெசவாலை அடிக்கல்நாட்டு விழாவில் மன்னார் அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்குமேற்படிகிராம முன்னேற்றச்சங்கத் தலைவர் திரு. வே. சு. நடராசா தலைமை தாங்கினர்.

புதிய நெசவாலையின் கல்நாட்டுவிழாவை சைவசமய சம்பிரதாய முறைப்படி அரசாங்க அதிபரின் பாரியார் திருமதி அன்ரனி தேவநேசன் நாட்டிவைத்தார்.

அடுத்துப்பேசிய மன்னார் தலைமைக் காரியாதிகாரி, த. வாவதேவன் கூறியதாவது: மன்னார்ப் பிரதேசத்தில் ஏழு நெசவாலைகளுக்கு நன்கொடை கொடுக்கப்பட்டிருந்தது. அதில் இந்த வவனிக்குள குடியேற்றத் திட்டத்துக்கு ஒருநெசவாலையை அரசாங்கம் அளித்ததையிட்டு நான்பெருமைப்படுகிறேன். இந்த நெசவாலையின் மூலம் எத்தனையோ இளம் பெண்கள் தங்கள் வாழ்க்கையைக் கொண்டுநடாத்துவார்கள் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்" கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு, எல். பேக்மன் உட்பட இன்னும் பலர் பேசினர்.

## சீனரின் உடல் மீட்கப்பட்டது

ஹேக், ஜூலை 20

இங்கு படுகாயங்களுடன் மரணமடைந்தசீனதொழில் நுட்பநிபுணரின் உடலை டச்சு அரசாங்கம், சீனத் தூதரகத்திடமிருந்து மீட்டது. இந்தமரணசம்பந்தமாக பிரேத பரிசோதனை செய்யப்படவிருக்கிறது.


இதுசம்பந்தமாக சீனத் தூதரகப் பொறுப்பதிகாரி ஏற்கனவே நாட்டைவிட்டுச் செல்லும்படி உத்தரவிடப்பட்டிருப்பது தெரிந்திருக்கும்.


**4-வது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 3, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்...... எதற்கோ அழுதாள். ஆனல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



**ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்**
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
**"வெண்ணிற ஆடை"**
(சித்ராலயா)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4-45, 7-00, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
**டஞ்ஜேஸ்**
**TANGIERS**
(ADULTS ONLY)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - ராஜஸ்ரீ
நடித்த
**அம்மா எங்கே?**


## விளம்பரம்

**General Arts Qualifying Examination Classes**

Conducted at Chundikuli Girls' College, Jaffna. All subjects provided. Please apply early Mrs. S. Nadarajah C/o Miss M. Y. Muthiah, 12, Colombagam Road, Jaffna. 675

### மனேஜர் தேவை

கண்டாவளை ப, நோ. கூ. சங்கத்துக்கு மனேஜர் தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவராகவும் S. S. C. யில் அல்லது G. C. E. ஒரேமுறையில் ஆறு பாடங்களில் சித்தி எய்தியவராகவும் சங்க அலுவல்களைத் தமிழில் நடாத்தக்கூடியவராகவும் ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும். கூட்டுறவுப்பயிற்சி விரும்பத்தக்கது. ஆரம்பசம்பளம் சகல படிகளுமுட்பட மாதம் ரூபா 125/-. ஆனல்தராதரம், திறமை, அனுபவத்திற்கேற்ப ஆரம்பசம்பளம் 150/-ரூபாவாகஉயர்த்தப்படலாம்.

பிணை: காசுரொக்கம்ரூபா 1000/-, ஆதனம் ரூபா 2000/-. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 28-7-66-க்கு முன் பதிவுத்தபால்மூலம் "காரியதரிசி, 218-220 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்" என்று விலாசமிட்டு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். 660

## பொலிஸாருக்கு ஆறுதல்

சங்கானை, புதன்

பொலிஸ் இலாகாவில் திடீர்திடீரென நடைபெற்றுவந்த உடுப்பு ஆயுதப் பரிசோதனை தற்சமயம் நீக்கப்பட்டு விட்டதாக பொலிஸ் பிரிவின் உயர்தர அதிகாரி சகல பொலிஸ்நிலையங்களுக்கும் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் தலைவராக தெரிவு

களுவாஞ்சிக்குடி, புதன்

பழுகாமம் கிராமசபையின் தலைவர் தெரிவு மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஜே. காசிநாதர் தலைமையில் நடைபெற்றது. இருபத்தைந்து வயது இளைஞன திரு. கே. இராசரெத்தினம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். திரு. கே. மார்க்கண்டு உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## குருபூசை ஏற்பாடுகள்

சுழிபுரம், புதன்

சிவபாதசுந்தரனாரின் குருபூசை தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாட அவருடைய பழைய மாணவர்கள் ஏற்பாடுகள்செய்து வருகின்றனர். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும் இவ்வைபவத்தில் பல அறிஞர்கள் கலந்து கொள்ள இருக்கின்றனர்.


**The Jaffna Academy**
Institute of Academy & Technical Education
**CHUNDIKULI**

Wanted a graduate with suitable academic qualification and administrative experience to be the Director of the Academy.

**Salary Rs. 500/-p. m. (all inclusive)**

Apply to Chairman, Board of Management, Jaffna Academy, Chundikuli before 6th., August 1966.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்மேற்கு ஆபிரிக்கா விஷயம்:

# ஐ. நா. வில் ஆபிரிக்க நாடுகளின் போர்க் கோலம்!

## உலக நீதிமன்றத் தீர்ப்பில் பல நாடுகள் ஆத்திரம்

### ஐ.நா.வின் விசேஷபொதுச்சபை கூட்டத்திற்குமுயற்சி

### 36 நாடுகள் செயல்கமிட்டி ஏற்படும்

நியூயோர்க், ஜூலை 20

உலக நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து, ஐ. நா.விலுள்ள 36 ஆபிரிக்க நாடுகள், தென்மேற்கு ஆபிரிக்கா மீதான தென்னுபிரிக்க நிர்வாகத்தை உடைக்கும் நோக்கத்துடன் செயல்கமிட்டி ஒன்றை நிறுவவிருக்கின்றன. இதுசம்பந்தமாக பொதுச் சபையின் விசேஷ கூட்டத்தை கூட்ட முயல்வதாய் கானு அறிவித்திருக்கிறது.

தென்மேற்கு ஆபிரிக்கா மீதான தென்னுபிரிக்காவின் வரையறையற்ற ஆதிக்கத்தை முடிவுக்குக்கொண்டுவருவது பற்றி பொதுச் சபை ஆலோசிக்கும் என கானு பிரதிநிதி கூறினுர்.

ஆபிரிக்க மக்களின் கஷ்டங்கள் நீடிக்கப்பட்டிருப்பதாயும், இவ்விஷயத்தில் நேரடி நடவடிக்கை தேவை என்றும், உலகநீதிமன்றத் தீர்ப்பு ஒரு மோசடியும், அரசியல் நோக்கமும் கொண்டது என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

தென்னுபிரிக்கா மீது பலாத்கார நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், ஆபிரிக்க நாடுகள் படைபலத்தை உபயோகிப்பது குறித்து ஆராயவேண்டும் என்றும் கென்யா அரசாங்கம் கூறியுள்ளது

ஸாம்பியா அதிபர் கவுண்டா, உலக நீதிமன்றத் தீர்ப்பு தமக்கு அதிர்ச்சியை அளித்துவிட்டதாய்க் கூறினுர்.

சட்ட நுட்பம் என்ற போர்வையில் ஆபிரிக்கர்களை உலக நீதிமன்றம் கொள்ளையடித்துவிட்டது என எதியோப்பிய வெளிநாட்டமைச்சு குறிப்பிட்டது.

## சாஸ்திரியின் மாமன் மரணம்

புதுடில்லி, ஜூலை 20

முன்னுள் இந்தியப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியின் மாமன் ராம்பிரஸாத் இன்று புதுடில்லியில் காலமானுர். அவருக்கு வயது 90. காலஞ்சென்ற திரு. சாஸ்திரியின் உடலை டாஷ்கண்டிலிருந்து கொண்டுவந்தவர்களில் இவரும் ஒருவர்,

## பிரேஸில் மீண்டும் தோல்வி!

லண்டன், ஜூலை 20

உலக சாம்பியன் பிரேஸில் மீண்டும் தோற்றது! 3-1 கோல்களால் போர்த்துக்கல் பிரேஸிலைத் தோற்கடித்தது.

வடகொரியா 1—0 கோலினுல் இத்தாலியைத் தோற்கடித்தது மற்ருேர் அதிசயமாக இருந்தது.

அர்ஜண்டீனு 2—0 கோல்களால் சுவிர்ஸர்லாந்தை தோற்கடித்தது.

உருகுவேக்கும் மெக்ஸிக்கோவுக்குமிடையே நடந்த போட்டியில் எக் கட்சியும் கோல் போடவில்லை.

நேற்று லண்டனில் நடைபெற்ற உலக உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகளின் முடிவு இது.

## "இரு கம்யூனிஸ்ட் பிரிவினரும் ஒன்று படவேண்டும்"

### திருச்சியில் அண்ணுதுரை

திருச்சி, ஜூலை 20

இடதுசாரி, வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபடவேண்டும் என தி. மு. க. தலைவர் ஸ்ரீ அண்ணுதுரை ஒரு கூட்டத்தில் பேசியபோது கேட்டுக் கொண்டார்.

'அடுத்துவரும் தேர்தலில் காங்கிரசை பதவியிலிருந்து வெளியேற்றவேண்டுமானுல் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேரவேண்டும். நாட்டிலுள்ள நடுத்தரவகுப்பினர், தொழிலாளர், பொதுமக்கள் ஆகியோரின் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது, தேர்தலில் காங்கிரஸைத் தோற்கடிப்பதையே பொறுத்துள்ளது' என்றும் அண்ணுதுரை குறிப்பிட்டார்.

''காங்கிரஸை விரட்டினுல்தான் விலைஉயர்வு, பணவீக்கத்துக்கு பரிகாரம்காண முடியும். கொசுத்தொல்லை இருக்கிறது என்ருல் ஒரு நபர் தனது மூகத்தையும், உடம்பையும் அடிக்கடி தேய்த்துக்கொள்வது பரிகாரமல்ல. தொல்லைகொடுக்கும் கொசுவையே ஒழித்துக்கட்டவேண்டும். அதே போல் மக்கள் பிரச்னைக்குப் பரிகாரம் அதிகாரத்திலிருந்து காங்கிரஸை வெளியேற்றுவதில்தான் இருக்கிறது. எனவே எதிர்க்கட்சிகள் தங்களிடையே பலப்பரீட்சையில் ஈடுபடக்கூடாது'' என்றும் அவர் கூறினுர்.

ஆரம்பத்தில் வலதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அண்ணுதுரை மேடைக்கு வரவே, மக்களின்கவனம் அவர்மீது திரும்பியது எனவே கல்யாணசுந்தரம் தனது பிரசங்கத்தை அரைகுறையாக நிறுத்திக்கொண்டார்.

## வியட்னும் சண்டையில் சீன தலையிடுமாம்

### 18 வட வியட்னும் கைதிகள் விடுதலையாவர்

பீகிங், ஜூலை 20

வியட்னும் குழப்பத்தில் எந்நேரத்திலும் சீன தலையிடும் என சீனப் பாதுகாப்பு மந்திரி கூறியதாக அறிவிக்கப்பட்டது.

அமெரிக்க விமானிகள் யுத்தக் குற்றவாளிகளாகத் தண்டிக்கப்படவேண்டும் என பீகிங்கிலும், பிராக்கிலுமுள்ள வடவியட்னும் தூதர்கள் கூறியிருக்கிருர்கள்.

#### கைதிகள் விடுதலை ஆவர்

இதற்கிடையில் ஜெனிவா ஒப்பந்தம் கையெழுத்தான 12-வது ஆண்டு நிறைவை ஒட்டி 18 வடவியட்னும் கைதிகளை விடுவிக்க தென் வியட்னும் அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

தென்வியட்னும் வசம் 400 வடவியட்னும் கைதிகள் இருக்கிருர்கள். வடவியட்னுமிலுள்ள அமெரிக்க கைதிகள் சம்பந்தமான ஹானேயின் மனப்போக்கை தளர்த்தும் பொருட்டு இந்த 18 பேர் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

#### ஹோஸிமின்

போர்க் கைதிகள் பற்றிய வடவியட்னுமின் கொள்கை மனித கருணையுடன் கூடியது என அதிபர் ஹோசிமின் அமெரிக்க சோஷலிஸ்ட் திரு. நோர்மன் தோமஸுக்கு அனுப்பியுள்ள பதில் செய்தியில் கூறியிருக்கிருர்.

#### அதிக நிதி கோருவார்

வியட்னும் யுத்தம் அடுத்த ஜூன் மாதத்திற்குள் முடிவடையாவிட்டால், வியட்னுமுக்காக காங்கிரஸிடம் அதிக மான்யம் கோரப்போவதாய் ஜனுதிபதி ஜோன்ஸன் அறிவித்திருக்கிருர். இந்நிலையில் புதிய வரிகள் விதிக்கப்படும் என்றும், வியட்னுமுக்கில்லாத இதர செலவுகள் குறைக்கப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

#### வடகொரியா

வடகொரியா, டாக்டர் ஹோசிமினுக்கு பூரண ஆதரவளிக்கும் என அந்நாட்டுப் பிரதமர் ஹானேய்க்கு செய்தி அனுப்பியிருக்கிருர்.

#### 10 விமானங்கள் சேதம்

நேற்று ஹானேய், தைபாய உயிர 10 அமெரிக்க விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாய் வடவியட்னும் அறிவிப்பொன்று கூறியது, வடவியட்னும் எல்லைக்கருகில் நடைபெற்ற ஒரு சண்டையில் அமெரிக்க மாலுமி துருப்புகளுக்கு பலத்த சேதம் விளைவிக்கப்பட்டதாயும் மேலும் கூறப்பட்டது

5 அமெரிக்க விமானங்கள் ராக்கெட் மூலம் வீழ்த்தப்பட்டன என்றும், பல விமானிகள் சிறைப்பிடிக்கப்பட்டனர் என்றும் தொடர்ந்து கூறப்பட்டது.

#### ஆர்ப்பாட்டம்

வார்ஸாவில் அமெரிக்க குண்டுவீச்சை தொடர்ந்து நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், அமெரிக்கத் தூதராலயத்துக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. கல்கத்தாவில் அமெரிக்கர் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடத்தினுர்கள்.

கடந்த 5 தினங்களில் 300க்கு மேலான வியட்காங்கியரைக் கொன்றதாக அமெரிக்கர் கூறினுர்கள்.

## இனக்கலவரம்

வாஷிங்டன், ஜூலை 20

அமெரிக்காவில் பல நகரங்களில் மூண்ட இனக்கலவரம் காரணமாக ஒரு நீக்ரோ மாண்டார் மற்றும் மூவர் காயமடைந்தனர்.

## ரொடீஷியா

ஸாலிஸ்பரி, ஜூலை 20

ரொடீஸிய எல்லையில் பொலிசாருக்கும் தேசியவாதிகளுக்குமிடையே கைகலப்புகள் ஏற்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

ரஷ்ய பத்திரிகைகளில்

## இந்திரா பிரசங்கத்தின் பகுதிகள் இருட்டடிப்பு!

மாஸ்கோ, ஜூலை 20

ஸ்ரீமதி இந்திரா காந்தி கிரம்ளின் மாளிகையில் கம்யூனிஸ்ட் சீனவையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியையும்கண்டித்துப்பேசிய பகுதிகளை ரஷ்யப் பத்திரிகைகள் பிரசுரிக்கவில்லை.

யுத்தம் தவிர்க்கமுடியாதது என்ற வறட்டுச் சித்தாந்தத்தை வற்புறுத்துவதற்காகப் பெரிய ஆசிய நாடு ஒன்று பதட்டங்களை ஏற்படுத்த முயன்றுகொண்டிருப்பதாக அவர் சீனவைப் பற்றி மறைமுகமாகக் கண்டித்திருந்தார்.

இந்தியாவின் முற்போக்குக் கட்சிகள் எனச் சொல்லிக்கொள்ளும் கட்சிகள், நாட்டின் அரசியல் சுதந்திரத்தைப் துஷ்பிரயோகம் செய்வதாயும் அவர் கூறியிருந்தார்.

ரஷ்ய செய்தி ஸ்தாபனமான டாஸ் தனது ஆங்கில-ரஷ்ய சேவையில் இந்தப் பகுதிகளை நீக்கிவிட்டது, ரஷ்யப் பத்திரிகைகளும் இதேவழியைப் பின்பற்றின.

## ரூபா 33,00 கோடி வெளிக்கடன்

புதுடில்லி, ஜூலை 20

4-ம் ஐந்தாட்டுத் திட்டத்துக்கு ரூபா 33,00 கோடி வெளிக்கடன் எதிர்பார்ப்பதாய் திட்டமந்திரி திரு. அசோக் மேத்தா காங்கிரஸ் காரியக்கமிட்டியில் கூறினுர். இதில் 2,300 கோடி ரூபாதான் நிகரதேவை என்றும், மிகுதி 1000 கோடி ரூபா கடனைத் திருப்பித்தர உபயோகிக்கப்படும் என்றும் அவர் தொடர்ந்து கூறினுர்.

## பிரான்ஸ் அணுகுண்டு வெடித்தது

பாரிஸ், ஜூலை 20

தென்பசிபிக் தீவான தாஹிட்டியிலிருந்து 800 மைல் தென்கிழக்கே பிரான்ஸ் மற்ருேர் அணுகுண்டை வெடித்தது. இந்தக் குண்டு சூபர் ஸோனிக் விமானத்திலிருந்து போகப்பட்டு தாழ்வான உயரத்தில் வெடித்தது. பிரான்ஸ், விமானம் மூலம் அணுகுண்டைப் போட்டது இதுவே முதல்தடவை, தற்போதைய தொடரில் இன்னும் 4 குண்டுகளை பிரான்ஸ் வெடிக்கும்,

## மக்கள் வெளியேற்றம்

சிசிலி, ஜூலை 20

சிசிலியில் நிலச்சரிவு ஏற்பட்டதை [illegible] வெளியேறினர்கள்

## திருவையாற்றில் நாதஸ்வர கல்லூரி துவக்கம்

தஞ்சாவூர், ஜூலை 20

திருவையாற்றில் நாதஸ்வரம், தவில் பயிற்சிக்கல்லூரியை முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் துவக்கிவைத்தார்.

நாதஸ்வர இசை மிகப் புராதனமானது என்றும், தெய்வீககலை என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முற்காலத்தில் இக்கலையை மன்னர்களும், செல்வந்தர்களும் போற்றிவந்தனர். சமீபகாலமாக இது அழிந்துவிடும் அறிகுறிகள் தென்படுகின்றன. ஆனுல் நாதஸ்வரக்கலையைத் தக்கவிதத்தில் மறுமலர்ச்சி அடையச் செய்யவேண்டும். திருவையாற்றுக் கல்லூரி இப்பணியைப்பூர்த்திசெய்யும்'' என அப்போது அவர் பேசியபோது கூறினுர்.

சென்னையில் நாதஸ்வரப் பயிற்சிநிலையம் சரிவரச் செயல்படாததால்தான் திருவையாற்றில் அதைத் துவக்கத் தாம் விரும்பியதாக அவர் கூறினுர்.

கல்லூரியில் பயிற்சிபெற்று வெளிவரும் நாதஸ்வர வித்வான்களுக்கு வேலையளித்து ஊக்குவிக்குமாறு கோயில்களுக்கும், தேவஸ்தானங்களுக்கும் அவர் விண்ணப்பம் விடுத்தார்,

கல்லூரியில் சேருவதற்கான குறைந்தபட்சத் தகுதியைத் தளர்த்துமாறும், பரீட்சை முறையை மாற்றி அமைக்குமாறும் கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். வீராசாமிப்பிள்ளை கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

காலம்தான் சரியான சோதனைக்கருவியாகும். அதுதான் நாம்செய்வது சரியா இல்லையா என்பதைக் கடைசியில் முடிவுசெய்யவும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49, JAFFNA.
Telegrams: EELANADU Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி மீ 5 (21-7-66)


## வங்கி ஊழியரின் நல்லமுடிவு

வங்கி ஊழியர் நியமனம், பதவிஉயர்வு சம்பந்தமான பிரச்னைகளை விசாரணை செய்வதற்கு ரோயல் கமிஷன் ஒன்றை நியமிக்கலாம் என்று தொழில் இலாகாவினர் தெரிவித்த 'சமரச' யோசனையை வங்கி ஊழியர் யூனியன் ஏற்றுக்கொண்டு, தங்களது பதினைந்து நாள் வேலைநிறுத்தத்தைக் கைவிட ஒப்புக்கொண்டுள்ளது. வங்கி ஊழியரின் வேலைநிறுத்தம் முடிவடைவது கண்டு மகிழ்ச்சியடைய வேண்டும்.

வங்கி ஊழியர் பிரச்னைக்கு இந்த ரோயல் கமிஷன் நியமன யோசனை சரியான பரிகாரமாகத் தோன்றவில்லையெனினும் 'நாட்டின் நலன்' கருதி தாங்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிடுவதாக வங்கிஊழியர் யூனியன் தலைவர் தெரிவித்திருக்கிறார். வேலைநிறுத்தம் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் மட்டுமல்ல, நாட்டுக்கே தீங்குவிளைக்கக்கூடியதென்றும் நாட்டின் நலனைக்கருதிவேலைநிறுத்தம் கைவிடப்பட்டு சமரசப்பேச்சு வார்த்தைகள் மூலம் தொழிலாளி-முதலாளி தகராறுகள் தீர்க்கப்படவேண்டுமெனவும் நாம்இதேபத்தியில் பல தடவைகளிலும் வற்புறுத்தி வந்திருக்கிறோம். 'நாட்டின் நலன்' கருதி வங்கி ஊழியர் தமது வேலைநிறுத்தத்தை, பதினைந்து தினங்கள் கடந்தபின்னராவது கைவிட ஒப்புக்கொண்டதையிட்டு நாட்டின் நலனில் அக்கறையுடையோரனைவரும் நிச்சயம் மகிழ்ச்சியடைவர்.

வங்கிகளில்மட்டுமல்ல, எந்தஸ்தாபனத்திலும் ஊழியர் திருப்தியுடனிருந்தால்தான் அந்தஸ்தாபனம் முன்னேற்றமடையும். ஊழியர் திருப்தியுடனிருப்பதற்கு ஊழியருக்கும் நிர்வாகத்தினருக்குமிடையில் நல்லுறவு நிலவவேண்டியது அவசியம். நிர்வாகத்தினரின் நம்பிக்கையை ஊழியர் பெற்றிருக்கவேண்டியதும் அவசியம்.

இலங்கையிலுள்ளவங்கிகளின் அமைப்பு, நிர்வாக விதிமுறைகள் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் உருவாக்கப்பட்டவை. நாட்டின் வாழ்க்கை முறையிலேயே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டுவரும் இக்காலத்தில்வங்கிகளின் அமைப்பு, நிர்வாக விதிமுறைகளிலும் மாறுதல்கள் செய்ய வேண்டியது அவசியமே. ரோயல் கமிஷன் இப்பணியைச்சரியான முறையில் நிறைவேற்றுமென்று எதிர்பார்ப்போம்.

வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுவிட்டதால், தோட்டத்தொழிலாளரின்வேலைநிறுத்தத்தையும், நெசவாலை ஊழியரின் வேலைநிறுத்தத்தையும் இனி ஒரு முடிவுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் அரசாங்கத்துக்குச் சங்கடமான நிலையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதென்று தொழிலமைச்சர் கூறியிருக்கிறார். தொழிலாளரின் வேலைநிறுத்தத்தை, அரசியல் நோக்கத்துக்காக சில ஸ்தாபனங்கள் பயன்படுத்தக்கூடும். இதனால் "வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளரின் கோரிக்கை நியாயமற்றதென்றோ, அவர்களுக்கு குறையில்லையென்றோ கருதுவதுவிவேகமல்ல. அமைச்சர்கூறியதுபோல் அரசியல் வேலைநிறுத்தங்களுக்கு அடிபணியக்கூடாதுதான். ஆனால் தொழிலாளரின் குறைகளையும் நியாயமான கோரிக்கைகளையும் அரசியல் முத்திரைகளையும் குத்தி புறக்கணிப்பது நல்லதல்ல. தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தப் பிரச்னையிலும் தொழிலமைச்சர் கவனம் செலுத்தி விரைவில் அதற்கும் ஒரு முடிவு காணவேண்டும். நாட்டின் நலனைக்கருதி தோட்டத் தொழிலாளரும் தங்கள் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவது அவர்களுக்கும் நல்லது.

### சிரமதானம்

மல்லாவி, புதன்.

யோகபுரம் 1ம்பகுதி புகழேந்தி கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் எதிர்வரும் 25ம் திகதி தமது பகுதியில் உள்ள பாதைகளை ச்சிரமதானமூலம் திருத்தி அமைக்க சகல ஏற்பாடுகளையும் செய்துவருகின்றனர். இவ்வைபவத்திற்குத் துணுக்காய்ப்பிரிவுக் காரியாதிகாரி திரு. மா. இராசரத்தினம் தலைமை தாங்குவார். இதற்கான சகல ஏற்பாடுகளையும் கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. கிருஸ்ணபிள்ளை சங்கத்தனாதிகாரி திரு. எஸ். இலட்சுமண பெருமாள் ஆகியோர்கவனித்துவருவதாகத் தெரியவருகிறது.

### மலையகத்தில் சமயப்பிரசாரம்

யாழ்ப்பாணம், வியாழன்

மலைநாட்டுச் சைவத் தமிழ் மக்கள் மத்தியில் தக்க சமயப்பிரசாரம் செய்படல் வேண்டுமெனநாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையம் விடுத்த வேண்டுகோளைச் சைவபரிபாலன சபை ஏகமனதாக ஏற்றுள்ளது மிகவிரைவில் சமயப்பிரசாரக் குழுவொன்று செல்லவிருக்கிறது. தோத்திரப்பாக்களைப் பண்ணோடு ஓதுதல், அச்சிட்டு வழங்குதல் என்பனவும் இக்குழுவினால் செய்யப்படும்.

### திருக்கேதீச்சரம் செல்வர்

சுழிபுரம், புதன்

திருக்கேதீச்சரத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் தாம் வருடாவருடம் செய்துவரும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை இம்முறையும் வெகுவிமரிசையாக கொண்டாடுவதற்கு திருக்கேதீச்சரம் செல்லவிருக்கின்றனர் அத்துடன் அவர்கள் பல இடங்களுக்கும் சென்று கல்லூரி திருப்புவார்கள் எனத் தெரியவருகிறது.

## தேசபக்தி, தெய்வபக்தி கொண்ட அஞ்சாநெஞ்சர்

### திருமலையில் ம. பொ. சி. க்கு புகழ்மாலை

திருகோணமலை, புதன்

"தேசபக்தி, தெய்வபக்தி, காந்தியபக்தி ஆகியன ஒன்றுசேரக்கொண்ட அஞ்சா நெஞ்சன்தான் ம. பொ. சி."

திருகோணமலை இளைஞர் அருள்நெறி மன்றத்தின் ஆதரவில் தமிழரசுக்கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானகிராமணியாரின் 60-வது வயது குறித்து நடைபெற்ற மணிவிழா வைபவத்தில் காந்தியவாதியான திரு. கோ. இராசகோபால் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார். திரு. பெ. பொ. சிவசேகரனார் தலைமைவகித்தார்.

தலைவர் தமது தலைமையுரையில் ம. பொ. சி. அவர்கள் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு திருகோணமலையில் நிகழ்ந்த திருக்குறள் மகாநாட்டில் கலந்துகொண்டமையையும், மகாநாட்டில் அவர் ஆற்றிய சங்கநாதம் போன்ற வீரம் மிக்க சொற்பொழிவின் குரல் இன்றும் தமது காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது என்றும், மாசற்ற-மாண்பு மிக்க தலைவர் ஒருவர் இப்பொழுது தமிழ்நாட்டில் யாரென்றால் அது சிலம்புச் செல்வர் சிவஞானம் அவர்கள் தான் என்று கூறினார்.

திரு. எம். எல். வல்தாரிஸ் பேசுகையில் தமிழகத்தின் தனிப்பெருமைக்குரிய பெரியார்களுள் இந்நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தனியிடம் வகிப்பவர் தலைவர் ம. பொ. சி. அவர்கள் தானென்றும், தமிழ்நாட்டுக்கும், தமிழினத்துக்கும் அவர்கள் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளால் தமிழகத்தின் தனிப்பெருந்தலைவராகவும், வள்ளுவர் வழி வாழும் அறவோனாகவும், சிலப்பதிகாரத்தின் வழி வாழும் கற்புடைய பெருமகனாகவும் விளங்குகின்றார் என்றும் கூறினார்.

புலவர் திரு. ஏ. டபிள்யு. அரியநாயகம் பேசுகையில் தான்கொண்ட அறக்கடமைகளை எந்நிலையிலும் மாற்றியமைக்காத ஒரு தன்னிகரில்லாச் சான்றோனாகவும், தனிப்பெருந் தலைவராகவும் ம. பொ. சி. வாழ்ந்துவருகிறார் என்றார்.

திரு. தா. சீ. வில்வராஜ் தலைவர் ம. பொ. சி.யை வாழ்த்தியும் வணங்கியும் அமைந்த தமது கவிதையை அவையில் சர்ப்பித்தார்.

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இப்படியும் நடக்கிறதாம்

யாழ்ப்பாணம், புதன்

ஏற்புவலி காரணமான ஆரம்ப அறிகுறிகளுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி மூன்றாவது வார்ட்டில் அனுமதிக்கபபட்டபதினொரு வயதுச்சிறுவன் ஒருவன் சுமார் 4 மணிநேரத்துக்குப்பின்னரே டாக்டர் ஒருவரினால் பரிசோதனை செய்யப்பட்டானாம்!

கடுமையான காய்ச்சலுடன் இச்சிறுவனை பெற்றோர் ஆஸ்பத்திரியில் அனுமதித்தபொழுது டாக்டர்கள் ஒருவரும் அச்சிறுவனை உடனடியாக பரிசோதனை செய்யவில்லையென்றும் இது பற்றி பெற்றோர் அங்கிருந்த தாதிமாரிடம் விசாரித்தபொழுது டாக்டர்கள் உடனடியாக வரமாட்டார்களென்று அவர்கள்கூறினர் என்றும் கூறப்படுகிறது.

நான்குமணிநேர தாமதத்துக்குப் பின்னர் டாக்டர் அங்குவந்து அச்சிறுவனை பரிசோதனை செய்துவிட்டு மருந்தை எழுதிக்கொடுத்தாராம். என்ன பரிதாபம்! அந்த மருந்தும் ஆஸ்பத்திரியில் இல்லை! அதிகவிலை கொடுத்து அம் மருந்தை வாங்கவேண்டியநிலை பெற்றோருக்கு ஏற்பட்டதாம்!

## பாடசாலை மாணவர்களின் 'பணிஸ்' விளையாட்டு!

உடுப்பிட்டி, புதன்.

கரணவாய் வடக்கு தாமோதர வித்தியாசாலை மாணவர்கள் புது விதமான உதைப்பந்தாட்டமொன்றை விளையாடுவதைத் தினமும் வித்தியாசாலை மைதானத்தில் காணக்கூடியதாகவிருக்கிறது. இம்மாணவர்கள் தமது விளையாட்டுக்கு பயன்படுத்தும் பொருள் மதிய உணவுக்காக வழங்கப்படும் "பணிஸ்" ஆகும். அவர்களுக்கு வழங்கப்படும் பணிஸில் பூச்சிகளும், வண்டுகளின் இறக்கைகளும் காணப்படுவதால் மாணவர்கள் அதை உண்ணாது பந்தாகப் பாவித்து வருகின்றனராம் பாடசாலைக்கு பணிஸ் வழங்கும் பேக்கரியும், சுகாதாரப் பரிசோதகரின் அலுவலகமும் பாடசாலையின் அருகிலேயே இருக்கின்றன.

### ஆவரங்கால் சிவன் கோவில் பூங்காவன உற்சவம்

அச்சுவேலி, வியாழன்

ஆவரங்கால் சிவன் கோவில் பூங்காவன உற்சவம் நாளை நடைபெற [illegible] ஊர்மக்களால் இந்த உற்சவம் கொண்டாடப்படுகிறது.

### சினிமா பற்றி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழ் - சிங்கள - ஆங்கில தற்போதைய சினிமாத் தொழில் பற்றிய கருத்தரங்கொன்று நான்காம் குறுக்குத் தெருவிலுள்ள யாழ். அமெரிக்க கலாச்சார நிலையத்தில் இம்மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நிகழவிருக்கிறது.

சினிமா சிக்ஸ்டீன் சங்கத்தின் தலைவர் திரு. கே. முரளிதரன், இலங்கை வானொலி தமிழ் உதவி நிகழ்ச்சி அதிகாரி திரு. சி. வி. இராசசுந்தரம், மார்க்அன்ரனி பர்னாந்தோ ஆகியோர் இக்கருத்தரங்கில் பற்குபற்றுவார்கள். யாழ்ப்பாணம் பிரதேச கலா மன்றத்தின் காரியதரிசியும் யாழ்ப்பாணம் காரியாதிகாரியுமான திரு எஸ். சிவஞானம் கருத்தரங்கிற்கு தலைமை வகிப்பார். இதையடுத்து யு. எஸ். ஐ. எஸ். படக்காட்சிகள் இடம் பெறும்.

## நாட்டிலும் நகரிலும்

பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் இலங்கைக்கு வந்து கொழும்பிலும் மலைநாட்டில்பல இடங்களிலும் பஜனை செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் கேட்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. அத்துடன் ஒரு பெருங் கவலை. அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து இங்குள்ள ரசிகர்களையும் மகிழ்விக்க முடியாமல் போய்விட்டதே என்று. இப்பொழுதும் ஒன்றும் மோசமாகிவிடவில்லை. இந்தக் கடைசி நேரத்திலாவது யாரும் நினைத்தால் அவரை யாழ்ப்பாணத்துக்கு வரவழைக்கலாம்.

ஸ்ரீ முருகதாஸை நான் முதலில் சந்தித்தபோது அவர் திருவாங்கூர் பிரதம நீதிபதியாயிருந்த 'திருப்புகழ் மணி' ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயரின் சீடராயிருந்தார். இது சுமார் இருபது வருடங்களுக்கு முன் என்று நினைக்கிறேன். ஐயர் கதிர்காமம் வந்தபோது முருகதாஸ் அவர்களும் கூட வந்திருந்தார். ஐயர் அவர்களின் திருப்புகழ் பஜனைகளில் அவர் சுருதிபோட்டு பின்பாட்டும் பாடினார்.

1951-ம் ஆண்டு முருகதாஸ் தனியாகவே கதிர்காமத்துக்கு வந்திருந்தார். அங்கே அவர் பாடிய பாடல்கள் என்றுமே என்மனத்தைவிட்டு அகலமாட்டா. அன்றைக்கு நினைத்துக் கொண்டேன்-இவர் ஓர் அருமையான பாடகராய் விளங்குவார் என்று.

சில வருடங்களுக்கு முன்பு திருச்சி சென்றிருந்த சமயம் அங்கே ஒரு சங்கீத ரஸிகர் வீட்டில் முருகதாஸின் பஜனைக் கச்சேரி ஏற்பாடாயிருந்தது. இன்று சங்கீத உலகின் முதலாம் நம்பர் வித்வான்களில் ஒருவராகிய மதுரை மணிஐயர் அந்த வீட்டின் மேல்மாடியில் தங்கியிருந்தார். நான் அவருடன் சிறிதுநேரம் பேசிவிட்டு கீழே முருகதாஸின் பஜனை நடக்கிறதென்று மணிஐயரிடம் கூறிவிட்டு கீழே இறங்கிவந்துவிட்டேன். மணிஐயர் கீழே வரவில்லை.

முருகதாஸ் சாஸ்திரோக்தமான ராகம், வர்ணம், கீர்த்தனை, பல்லவி முதலியவை பாடுவதில்லை. சிறு சிறு பஜனைப் பாட்டுக்களைத்தான் பாடுவார். பெரிய வித்வானாகிய மணி ஐயர் 'இவர் என்னத்தை பாடப் போகிறார்' என்று நினைத்து மேலே இருந்துவிட்டார்.

முருகதாஸ் தமது விசேஷ ஆர்மோனியப் பெட்டியில் விரல்களை வைத்து சுருதியுடன் இரண்டறக் கலந்து பாரி சாரீரத்தில் அற்புதமாகப் பாடினார் சுமார் பதினைந்து நிமிடங்கள் கழிந்திருக்கலாம், மேலேயிருந்த மணிஐயர் திடுதிடுவென்று கீழே இறங்கி வந்து முருகதாஸின் முன் உட்கார்ந்து கொண்டு 'ஆஹா' போட ஆரம்பித்துவிட்டார்.

அத்தகைய மோகனசக்தி முருகதாஸின் பாட்டில் இருக்கிறது. அவருடைய சாரீரம் வர்ணிக்க முடியாத ஒரு கவர்ச்சி பெற்றுள்ளது. அதற்கு இணையான குரல் ஒன்றைக் குறிப்பிடுவதானால் காலஞ்சென்ற வங்காளப்பாடகர் கே. எல். சைகாலின் குரலைத்தான் சொல்லலாம்.

— வழிப்போக்கன்

குறிப்பு: ஸ்ரீ முருகதாஸ் இம்மாதம் 26-ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்து பஜனைக் கச்சேரி செய்வார் என்று இதை எழுதிமுடித்த பின் ஓர் அன்பர் தெரிவித்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

தார். மிகவும் மகிழ்ச்சி. நல்லதோர் சந்தர்ப்பம். இசைப்பிரியர்கள் தவறாமல் அவருடைய பாட்டைக் கேட்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எழுதுவினைஞர் சேவையில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு!

### தூதுக்குழுவுக்கு நல்லூர் எம். பி. தகவல்

யாழ்ப்பாணம், வியாழன்

''தமிழ்ப்பட்டதாரிகளின் நீண்டநாள் வேலையில்லாப் பிரச்னையை அரசாங்கமோ அல்லது அரசியல் கட்சிகளோ தீர்த்துவைப்பதற்கு இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும்மேற்கொள்ளவில்லை. இப்பொழுது தமிழ் எம். பி.க்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் பட்டதாரிகளின் பிரச்னையைத்தீர்ப்பதற்கு ஏன் அவர்கள் நடவடிக்கை எடுக்கக்கூடாது?''

இவ்வாறு திரு. ம. பத்திநாதர் தலைமையில் சென்ற பட்டதாரிகள் தூதுக்குழு ஒன்று யாழ்ப்பாண வாடி வீட்டில்தங்கியிருந்த தமிழரசுக்கட்சித்தலைவரும் நல்லூர் எம். பி. யுமான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனிடம் கேட்டுக்கொண்டது. பட்டதாரி ஆசிரியர் பதவிகளுக்கான நியமனங்கள் காரணமின்றித் தாமதிக்கப்பட்டு வருதாகவும் கடந்த 4 மாதங்களுக்குமுன் நடைபெற்ற நேர்முகப்பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிட்டு நியமனங்களைச் செய்வதற்கு ஊக்குவிக்கவேண்டுமென்றும் 200 மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு தமிழ்ப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தமிழ்ப் பாடசாலைகளில் காலியிடங்கள் இருப்பதாகவும் மிகக்குறைந்த அளவான 60 பேர்களுக்கு மட்டுமேநியமனம்கொடுக்க கல்விலிலாகா தீர்மானித்திருப்பது வேண்டுமென்றே வெற்றிடங்களை இல்லாமல் செய்வதுபோலாகுமென்றும் எம். பி. யைச் சந்தித்த தூதுக்கோஷ்டி அவரிடம் சுட்டிக்காட்டியது.

பட்டதாரிகள் குழுவின் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட டாக்டர் நாகநாதன் பதிலளிக்கையில் படித்தவாலிபர் யாவருக்கும் அரசாங்க இலாகாக்களில் வேலைவாய்ப்பளிப்பது கடினமான விஷயமென்றும் படித்தவாலிபர்கள்தனித்து விவசாயத்தில் ஈடுபடவேண்டுமென்றும், பட்டதாரி ஆசிரியர்கள் நியமனங்கள் விரைவில் நடைபெறநடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டார்.

''எழுதுவினைஞர் சேவையில் உயர்ந்த தரத்தில் வேலைகள் வழங்கப்பட்டால் நாங்கள் ஏற்கத்தயாராக இருக்கிறோம்'' என்று கேட்டுக்கொண்ட பட்டதாரி தூதுக்குழுவிற்குப் பதிலளித்தடாக்டர் நாகநாதன், எழுதுவினைஞர் சேவையில் தகுதிக்கேற்ப பதவிகள் வழங்கும் வசதிகள் உண்டாகுமென்றும் அவற்றைவிரைவில் நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# 'விவசாயத்தில் ஈடுபடுக'

கோண்டாவில், புதன்

''கல்லூரி மாணவர்கள்புத்தகப் பூச்சிகளாக மட்டுமிருந்தால் போதாது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஈடுபட்டு நாட்டிற்குத் தொண்டுசெய்யப் பழக வேண்டும். நாட்டுக்குத் தொண்டுசெய்வ தென்ருல் பேனு பிடித்துச்செய்யும் தொழில்களில் ஈடுபடுவதல்ல. கற்ற கல்வியைக் கொண்டு விஞ்ஞான ரீதியில் விவசாய உற்பத்தியைமேன்மையுறச் செய்வதே உண்மையான தொண்டாகும்.''

அக்கராயன் குளத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியர் மாணவர்களது களைபிடுங்கு விழாவை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் யாழ்ப்பாணம் மாவட்டத் தலைமைக் காரியாலய காரியாதிகாரி திரு. டபிள்யு. டி. செல்வரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் விவசாய உற்பத்தியில் ஈடுபடுவது தாழ்மையான செயல் என்ற மனப்பான்மையை கற்றவர்கள் களைந்து விவசாய உற்பத்தியில் ஈடுபடுவார்களேயானுல் நம் நடு சுபீட்சமடையுமென்பது திண்ணம். இவ்விடத்தில் ஒரு ஏக்கருக்கு ஆகக்கூடிய தொகை முப்பத்தைந்து புசல்வீதம் விளைந்தது. ஆனுல் இன்று ஒரு ஏக்கருக்கு அறுபத்தைந்து புசல் வீதம் நெல்விளைச்சலை அதிகரிக்க திரு. அ. சுப்பிரமணியம் முயற்சி செய்துள்ளார். இதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். என்ருர்.

இவ்விழாவில் இருநூறுக்கு மேற்பட்ட கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றினர். கிளிநொச்சி கராச்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. எஸ். பிள்ளைநாயகம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

# போரை நிறுத்தினுல் அமெரிக்க படைகளை வெளியேற செய்வோம்

### வடவியட்நுமுக்கு தென்வியட்நும் யோசனை

சைகோன், ஜுலை 20

வடவியட்நுமும், வியட்காங்கும் போரை நிறுத்தச் சம்மதித்தால், அமெரிக்கப் படைகளைத் தென்வியட்நுமிலிருந்து வெளியேற்றும்படி கேட்கத் தயாராய் இருப்பதாகத் தென்வியட்நும் அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு சைகோன் வானெலி மூலம் ஒரு பிரகடனமாக வெளியிடப்பட்டது.

''வடவியட்நுமின் படைப் பிரிவுகளும், அதன் அரசியல்பிரிவும் தென்வியட்நுமிலிருந்து விலக்கிக்கொள்ளப் படவேண்டும். தேசிய விடுதலை முன்னணி கலைக்கப்பட வேண்டும். அப்படியானுல் வடவியட்நும்மீது குண்டு வீச்சு 'நிற்கும்'' என்றும் இந்த ஒலிபரப்புப் பிரகடனம் அறிவித்தது.

இந்த நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்பட்டு, அமெரிக்கர் வெளியேறினுல் வடக்கு தெற்குவியட்நும்கள் இரண்டும் கூடித் தங்கள் நிலைமை பற்றி சுயேச்சையாக முடிவு செய்ய வழியேற்படும் என்றும் தென்வியட்நும் கூறியுள்ளது.

# 'பெரிய அரிவு இயந்திரம் நிறுவப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா.

சுன்னுகம் தொழிற்சாலையில் பெரிய அளவிலான அரிவு இயந்திரமொன்றை நிறுவவேண்டுமென்றும் தொழிலாளர்களை கூடுதலாக இங்குவேலைக்கு அமர்த்தவேண்டுமென்றும் நிர்வாகத்தைக்கோரும் இரண்டு தீர்மானங்கள் அண்மையில் சுன்னுகம் தொழிற்சாலையில் நடைபெற்ற தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபன தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக்கிளையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது இதனுடன் வேறு தீர்மானங்களும் நிறைவேறின.

பொதுக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்;-இ. கந்தையா, காரியதரிசி: வ. இ. தர்மலிங்கம், தனதிகாரி: கி. சுப்பிரமணியம் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பப்பட்டது.

# வெளிநாட்டு விளையாட்டுகளுக்கு மட்டும் ஊக்கமளிப்பதேன்?

கொழும்பு, புதன்

போயா நாட்களை விடுமுறை தினங்களாக்கிவிட்டதாலும், மகாநாயக்க தேரோவுக்கு கொழும்பில் உத்தியோக வாசஸ்தலம் அமைத்துக் கொடுத்துவிட்டதாலும் பௌத்த மதத்தினரின் இழந்த உரிமைகளைப் பெற்றுக் கொடுத்துவிட்டதாக நினைப்பது தவருகும் என்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசுகையில் வாலப்பனை எம். பி. திரு. பி. பி. எம். ஹெரத் குறிப்பிட்டார்.

சிம்மாசனப்பிரசங்கத்தில் பௌத்த சமயம் பற்றி எதுவும் குறிப்பிடாத அரசாங்கத்தைச் சேர்ந்த பௌத்தரல்லாத மந்திரி ஒருவர் அரசாங்கம் பௌத்த சமயத்தை பாதுகாத்து வளர்க்க நடவடிக்கை எடுத்துவருவதாக் கூறியிருப்பது வேடிக்கையானதாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

திரு. ஹெரத் தமது பேச்சின்போது மேலும் குறிப்பிட்டதாவது:

உயதரக் கல்வி மசோதா பிரிவினுக்களையும், மற்றும் பௌத்த ஆலய ஸ்தாபனங்களையும் அரசியல் கருவிகளாக்க முயற்சிக்கிறது.

இந்நாட்டில் பத்திரிகைகளின் நிவாகம் நாட்டின் அபிவிருத்திக்கு தடைபோடுவதாகவுள்ளது என்று முன்னைய அரசாங்கம் கூறியதை இப்போதைய அரசாங்கமும் உணரத் தொடங்கிவிட்டது. இராஜாங்க மந்திரி தன்னை பத்திரிகை ஒன்று கண்டித்துள்ளதாக சபையில் குறிப்பிட்டார். பத்திரிகைக்கவுன்ஸில் ஒன்றையும்மைநிறுவ இருப்பதாக சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்க்கட்சியினர் அன்று செய்ய முற்பட்டபோது பிழையாகத் தோன்றிய அதே செயல் தாங்கள் இப்பொழுது செய்யவிருப்பது சரியானதாகத் தெரிகிறது.

தொண்டமான் கட்சியும், தமிழரசுக்கட்சியும் வேலைநிறுத்தம் செய்துவந்தபோதிலும்கூட தொழில் மந்திரிக்கு தோட்டத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் அரசியல் சார்பானதாகத் தெரிகிறது.

விளையாட்டுத் துறைக்கென புதியதொரு அமைச்சு நிறுவப் பட்டிருந்தபோதிலும், அது வெளிநாட்டு விளையாட்டுகளுக்கே ஊக்கமளித்து வருகிறது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இந்த அமைச்சு செயல்பட்டு வருகிறது. இப்படியான அமைச்சு ஒன்று இருப்பதாக கிராமப்புறங்களில் உள்ள பொதுமக்களுக்கு எதுவுமே தெரியாது.

# இலங்கை பிஸ்கோத்துகள்

### வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

கொழும்பு, வியாழன்

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட 25 தொன் பிஸ்கோத்துகள் இம்மாத முடிவுக்குள் சவூதி அரேபியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும். இங்குள்ள பிரதம பிஸ்கோத்து உற்பத்துக் கொம்பனிக்கும் சவூதி அரேபியாவிலுள்ள ஓர் பெரிய பிஸ்கோத்துத் தாபனத்துக்குமிடையே இந்த ஒப்பந்தம் ஒழுங்காகியுள்ளது

மேற்கு ஜேர்மனிக்கும் பிஸ்கோத்து ஏற்றுமதி செய்ய அங்குள்ள இறக்குமதிக் கொம்பனியொன்றுடன் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடரப்படுமென இங்குள்ள பிரதம பிஸ்கோத்து உற்பத்திக் கொம்பனியின் பேச்சாளர் ஒருவர்தெரிவித்துள்ளார்.

# யு. எஸ். நகரில் நெருக்கடி நிலை

வாஷிங்டன், ஜுலை 20

அமெரிக்க ராஜ்யமான ஒஹியோவிலுள்ள கிளீவ்லண்ட் நகரில் இனக்கலவரம் காரணமாக நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை சுமார் 100 பேர் கைதாகியிருக்கிறார்கள்.

# 'பலிநிறுத்தம்பற்றி ஆராய மீண்டும் கூடுவர்'

யாழ்ப்பாணம், வியாழன்

வயாவிளான் கண்ணகை அம்மன் கோவில் பலிநிறுத்தக்கூட்டம் பிள்ளையார் கோவில்மண்டபத்தில்நடைபெற்றது. திரு. க. வே. சுப்பிரமணியம்தலைமையில் கோவில் மேற்பார்வையாளர் திரு. வ. நீலப்பிள்ளை, சிராமமுன்னேற்றச் சங்க, சனசமூகநிலைய, சைவபரிபாலனசங்க, பலநோக்குக் கூட்டுறவுச் சங்க, இந்துசமய விருத்திச் சங்க பிரதிநிதிகளும் பொதுமக்களும் கூட்டத்திற்குச் சமுகம் கொடுத்திருந்தனர்.

தலைவர், சைவமக்களாகிய நாம் சைவ ஆலயத்தில் பலியிடும் முறையைச் செய்வது மிகவும் கருணையற்ற பாவச்செயலாகு மென்றும் பத்தினித் தெய்வமாகிய கண்ணகைத் தேவியின் முன்பாக ஆடு கோழிகளைக் கதறக் கதற வெட்டுவது எம் சமயத்துக்குப் பெரும் இழுக்கு என்றும் கருத்துத்தெரிவித்தார். பலி நிறுத்தம் பற்றி விரிவாக ஆராய மீண்டும் ஓர் கூட்டத்தைக்கூட்ட வேண்டுமென முடிவுசெய்யப்பட்டது.

# மண்டலாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். திருவண்ணை நகர் அரசடி விநாயகர் ஆலய மண்டலாபிஷேகம் 22 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும், மாலை கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

# அம்பாறைக்கு அருகில் தலையில்லா முண்டம்

அம்பாறை, புதன்

அம்பாறை — அக்கரைப்பற்று வீதியில் முதல் பாலத்துக்குச் சமீபத்தில் அழுகிய நிலையில் தலையில்லா முண்டம் ஒன்று கிடக்கக் காணப்பட்டுள்ளது. இதுபற்றி பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

கொலையெனக் கருதப்படும் இச் சடலம் தனது மகனுடையது என்று அச் சடலத்தைப் பார்வையிட்ட அம்பாறையிலுள்ள போர்மன் சோமா டயஸ் சில்வா பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.

# மூவர் கைது

தெரணியகலை, புதன்

தெரனியகலைப் பகுதியில் மலப்பொல மத்திய மகா வித்தியாலயத்துக்கு அருகில் வெட்டுக்காயத்துடன் இறந்து கிடந்த சோமபாலா என்பவரின் மரணம் சம்பந்தமாக மூவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சோமபாலாவின் கழுத்தில் வெட்டுக்காயங்களிருக்கக் காணப்பட்டன.

இரத்தக்கறை படிந்த சாரம் ஒன்றும் பெனியன் ஒன்றும் மேசைக்கத்தியொன்றும் வித்தியாலயத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு வீட்டிலிருந்து பொலிசார் எடுத்தனர்.

# திருப்திகரமான விநியோகம்

சங்கானை, புதன்

கொட்டைக்காடுஅரசினர் ஆஸ்பத்திரி ஆரம்பமாகி பல வருடங்களாகியும் நீர் குறைந்த கிணறே பாவனைக்கு இருந்து வந்தது.

அண்மையில் சுகாதார இலாகாவின் தீவிரநடவடிக்கையால் இங்கு பெரிய கிணறு ஒன்று தோண்டித் தண்ணீர்த்தொட்டியும் கட்டப்பட்டுள்ளது. இப்போது திருப்திகரமான முறையில் நீர்விநியோகம் இங்கு நடைபெற்றுவருகிறது.

# விவசாயிகளுக்கு புதிய கடனுதவித்திட்டம்

கொழும்பு, புதன்

அரசாங்க விவசாய கடனுதவித்திட்டத்திலுள்ளநடைமுறைகளிற்பெரும் மாற்றங்களை ஏற்படுத்த உணவு, விவசாய அமைச்சு உத்தேசித்துள்ளது. இம்மாற்றங்களிற் பல, அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. பி. மகாதேவாவும் மற்றும் அதிகாரிகளுடனும் அரசாங்க அதிபர்கள் அண்மையில் நடாத்திய மகாநாட்டில் ஏற்கெனவே விவாதிக்கப் பட்டவையேயாகும்,

இப்போது நடைமுறையிலிருக்கும் விவசாயக் கடனுதவித்திட்டத்தில் மாற்றங்கள் சமர்ப்பிக்கும்படி பிரதமரால் நியமிக்கப்பட்டகுழு பின்வரும் முக்கிய யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

○ கூட்டுறவுப் பண்டகசாலைகளிலிருந்தே விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்பட வேண்டும்

○ இப்பண்டக சாலைகள் தமது பணத்தை இப்போது போல் விவசாய சேவைகள் இலாகாவிலிருந்து பெருமக்கள் வங்கியின் மாவட்டக்கிளைகளிலிருந்து பெற வேண்டும்;

○ கொடுக்கப்படும்கடனுதவிக்கு உத்தரவாதத்திட்டமொன்று அரசாங்கத்தினுல் இயக்கப்படும்;

○ இப்போதிருக்கும் முறை போலல்லாது, விவசாயிஇலகுவில் கடன்பெறும் வகையில் மாற்றம் செய்வது.

# இந்திரா அறிக்கையை அனுப்புக

பொன், ஜுலை 20

இந்திரா-கோஸிஜின் கூட்டறிக்கையில் ஜெர்மன் பற்றிய அம்சம்பற்றிய முழு விபரங்களைத் தெரிவிக்குமாறு மேற்குஜெர்மன் அரசாங்கம் புதுடில்லியிலுள்ள தனது தூதருக்குக் கட்டளையிட்டிருக்கிறது. (பி டி ஸி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நடக்கிறது

## குடிசையில் வாழும் அமெரிக்க கோடீஸ்வரர்!

கணக்கிட முடியாதசொத்துக்களின் வாரிசு. அமெரிக்காவில் ரொக்பெல்லர் குடும்பத்தில் பிறந்தவர். வயது 88. வாழ்வது உல்லாசம் நிறைந்த நகரத்திலல்ல, ஏழை எளியவர்கள் வாழும் கிராமத்தில் வேலை-வறுமை ஒழிக்கும் போரில் ஒரு ஊழியன். இப்படி நம்ப முடியாத ஒரு வாழ்க்கையை வாழ்ந்துவருபவர் 'ஜே' என்று செல்லமாக அழைக்கப்படும் ஜோன்தான்.

தனது நெட்டை உருவத்தையும் கம்பீரமான தோற்றத்தையும் கொண்டு பிறர் கவனத்தை ஈர்க்கும் ஒரு பெரிய தொழிலைத் தேடியிருக்கலாம். ஆனால் ஜோனுக்கு அது பிரியமில்லாமல் போய்விட்டது. அமெரிக்காவின் தலைநகரில் வாழக்கூடிய வசதியிருந்தும் அவற்றையெல்லாம் உதறிவிட்டு வெர்ஜீனியா என்ற கிராமத்தில் ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறார் இவர். ஏழை எளியவர்களோடு ஒன்றிக் கலந்து வறுமையை ஒழிக்கும்பெரிய பணியில் ஓயாது உழைத்து வருகிறார் இவர்.

சௌகரியமாக வாழ்பவர்கள் இவரைப் பார்த்து ஒருவேளை பரிகசிக்கக்கூடும். ஆனால் 'சிலர் டெலிவிஷனுடனேயே வாழ்ந்து வருகிறார்கள். இதனாலேயே வெளியில் நடப்பதை ஒன்றுமே உணராமல் அவர்கள் கெட்டுப்போய் விடுகிறார்கள்' என்பது இவரது அபிப்பிராயம். இதெல்லாம் ஒருவித அரசியல் தந்திரமோ என சிலர் எண்ணினர். ஆனால் இதற்கு அவர் அளித்துள்ள பதில் இதுதான்:

'என்னைப் பொறுத்த வரையில் நான் அரசியல் துறையில் எதுவித இலாபமும் அடையவில்லை. இது எனது விளையாட்டும் அல்ல என்பதும் எனக்குத் தெரியும். மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதால் அவர்களது அன்றாட பிரச்னைகளில் ஒன்றிக் கலப்பதால் எனக்கு ஒருவித தைரியம் ஏற்படுகிறது. எனது வாழ்க்கையில் மகிழ்ச்சி கிட்டுகிறது. மக்களை அவர்களது உண்மையான சூழ்நிலையில் காண விரும்புகின்றேன். இதுவே எனது நோக்கம்.'

---

## ஆஸ்பத்திரியில் இருந்தவர் கனவால் காயமுற்றார்

பதுளை பெரிய ஆஸ்பத்திரியில் சுகவீனம் காரணமாக அனுமதிக்கப்பட்டிருந்த 15 வயதுடைய கல்லூரி மாணவி ஒருவர் இரவு 9 மணியளவில் நித்திரை செய்து கொண்டிருந்த சமயத்தில் கீழே விழுந்து காயமுற்றார். இவர் நித்திரை செய்து கொண்டிருந்த சமயத்தில் தமது தந்தை தம்மை அழைப்பதாகக் கனவு கண்டதாகவும் இதன் காரணமாகவே தாம் விழ வேண்டிவந்ததாகவும் தெரிவித்தார்.

ஆஸ்பத்திரியின் மேல் மாடியில் அனுமதிக்கப்பட்டிருந்த இவருக்கு தற்போது கீழ்மாடியில் இடம் அளிக்கப்பட்டுள்ளது.

---

## சுகர்ணோ விரும்புவது

அதிகாரவலுவிழந்துவரும் இந்தோனேஷிய ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ பற்றிய நூலை நியூயோர்க்கில் வெளியிட்டுள்ளார்கள். இந்நூலை எழுதிய ஆசிரியர் லூயிபிஷர், இவரைப்பற்றி என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா?

அவர் எழுதியுள்ளது இதுதான்:

சுகர்ணோ நாட்டை விரும்புகிறார், தமது நாட்டு மக்களை விரும்புகிறார், பெண்களை விரும்புகிறார், கலையைவிரும்புகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக தம்மை விரும்புகிறார்.

---

## 12 வயதில் பத்திரிகை ஆசிரியர்!

தென் ஆபிரிக்காவில் 12 வயதுள்ள ஸ்டீபன் பொத்தா என்றசிறுவன் ஒருபத்திரிகையை நடத்திவருகிறார். இவரே இதன் ஆசிரியரும் நிர்வாக டைரக்டருமாக இருக்கிறார். 'ஹாவ்வே ஹவுஸ் எக்கோ' என்ற பத்திரிகையை நடத்திவரும் இவர் அடுத்த வருட மத்தியில் இப் பத்திரிகையின் விற்பனையை 900 ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளார். சொந்தத்தில் ஒரு அச்சுக்கூடத்தையும் விரைவில் வாங்க இவர் உத்தேசித்துள்ளாராம்.

---

## 29 கோடி செலவில் அணு சக்திக்கப்பல்

மேற்கு ஜெர்மன் மத்திய அரசாங்கம் அணு சக்தி கப்பலொன்றைக்கட்டத்திட்டமிட்டுள்ளது. இக்கப்பல் கட்டி முடிக்க மொத்தம் 28 கோடியே 77 லட்சம் ரூபாவரை செலவாகும். 1970-ம் ஆண்டுவரை இக்கப்பலை இயக்குவதற்கும் சேர்த்து மொத்தம் 44 கோடியே 10 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. கீல் துறைமுகத்தில் பிரமாண்டமான கப்பல் கட்டும் தளத்தில் இக்கப்பல் கட்டப்படுகிறது. இக்கப்பல் 515 அடிநீளமும், 64 அடி அகலமும் கொண்டதாக இருக்கும். இக்கப்பலில் 16,000 தொன் சரக்கை ஏற்றலாம்.

---

## நீல நிறத்தில் நிறை கூடுகிறது

கோழிக்குஞ்சுகள் நீலநிற பெட்டிக்குள் அடைக்கப்பட்டு வளர்க்கப்பட்டால் அவற்றின் நிறை விரைவில் அதிகரிக்கும் என வேர்மண்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிகப்பு நிற பெட்டிக்குள் அடைக்கப்பட்டு வளர்க்கப்பட்டால் இதற்கு எதிர்மாறான பலனைத்தான் தருமாம்.

---

## பிளாஸ்டிக் கார் திமிங்சலத்தின் சாப்பாடு!

ஒரு பிளாஸ்டிக் விளையாட்டுக்கார், மங்கையர்கள் கடற்கரைக்குச் செல்லும் போது எடுத்துச் செல்லும் கைபை, வாசனை கிறீம், டியூப் இவையாவும் 'காஷலோ" என்ற இன திமிங்கிலத்தின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்டன.

ஒரு சமயம் திமிங்கிலம் ஒன்று பிடிக்கப்பட்டபோது அதன் வாயில் ஆகாயவிமானடயர் ஒன்று கிடந்தது.

சோவியத் மீன்துறைசமுத்திர இயல்துறையின் பசுபிக் ஆராய்ச்சி நிறுவனத்தினர் இந்தப் பொருள்களையெல்லாம் சேகரித்து வைத்துள்ளனர்.

---

## சார்ளி சாப்ளின் கதை

பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் இப்போது பிரிட்டனில் தயாரித்துவரும் 'ஹாங்காங்கிலிருந்து ஒரு சீமாட்டி' என்னும் திரைப்படத்துக்கான கதை 1940ம் வருடத்தில் எழுதினாராம். இப்படத்தில் பிரபல இத்தாலிய நடிகை சோபியாலோறன், பிரபல அமெரிக்க நடிகர் மார்லன் பிராண்டோ ஆகியோர் பிரதான பாத்திரமேற்று நடிக்கின்றனர்.

---

## 1966-ம் வருட அதிசயம்!

1966-ம் வருடத்தில், அதாவது இந்த வருடத்தில் காணக்கூடிய அதிசயமொன்றுண்டு. சனிக்கிரகத்தைச் சுற்றியுள்ள வட்டம் மறைந்துவிடும். பூமி சனிக்கிரகத்தின் வட்டத்தின் மட்டத்தினூடாக செல்லும் வேளையில், 'கோணத்திலிருந்து' அவதானிக்கும்போது வட்டம் புலனாகாது.

இது சாதாரணமாக 20-30 வருஷத்துக்கு ஒருமுறை நடக்கிறது.

இவ்வட்டத்தின் அமைப்புப்பற்றி பல்வேறு கருத்துக்கள் உள்ளன. வட்டம் பல செண்டிமீட்டர் கடினம் என்பது சிலருடைய அபிப்பிராயம். இவ்வருடம் துணிக்கைகளால் அமைந்தது. அதன் விட்டம் சுமார் ஒரு மீட்டர், அகலம் ஒரு கிலோ மீட்டர். இது சோவியத் வான-பௌதிகவியல் நிபுணர் எம். பெப்ரோவின் கருத்து.

---

## 'இந்துசமயத்தை ஒரு பாடமாக்குக'

யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இந்துசமயம், கலாசாரம் என்பன பாடமாக அமைதல் வேண்டும் என சைவபரிபாலனசபை வேண்டுகோள் விடுத்ததற்கு இதுபற்றிப் பரிசீலனை செய்வதில் ஒரு குழு ஈடுபட்டிருப்பதாக பல்கலைக்கழக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பொழுது உயர்தர வகுப்புகளில் இந்து சமயம் ஒரு பாடமாகப் படிப்பிக்கப்படினும் அது இன்னும் பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வுக்குரிய பாடமாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## இலங்கையின் ஜனத்தொகை

○ இலங்கையின் ஜனத்தொகை ஒருகோடியே இருபது லட்சமாகியுள்ளது. இதில் 60 சத வீதத்தினர் 21 வயதுக்குட்பட்டவர்கள்.

---

## நகரும் பாடசாலை

ஊர்ஊராகச்சென்று அன்னிய மொழியைக் கற்றுக்கொடுக்கும் 'நகரும் பள்ளி' ஒன்று ஹனோவரிலிருந்து புறப்பட்டிருக்கிறது. 'பேச்சு சோதனைக் கூடம்' என அழைக்கப்படும் இப்பாடசாலை மேற்கு ஐரோப்பாவில் எல்லா முக்கிய நாடுகளுக்கும் செல்லும். டேப் ரிக்கார்டர்கள், மைக்ரோபோன்கள் ஆகியவற்றின் உதவியைக்கொண்டு அன்னிய மொழிகற்றுத்தரப்படுகிறது. ஆசிரியர் மேஜையுடன் மாணவர் அறுவர் இருந்து பேச்சைக்கேட்க ஆறு ஆசனங்களும் பார்வையாளர்கள் அமர 30 ஆசனங்களும் இந்த நகரும் பாடசாலையில் இருக்கின்றன.

---

பூமியைச் சுற்றி

## ஆயிரத்துக்குமதிகமான பொருள்கள் ஓடுகின்றன

விண்வெளியில் இப்பொழுது பூமியைச் சுற்றி ஆயிரத்துக்கும் அதிகமான பொருள்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவை மனிதனின் படைப்புக்கள்.

இவற்றில் சில மிக அக்கறையுடன் கவனமாகத் தயாரிக்கப்பெற்ற செயற்கைக்கோள்கள். சில செயற்கைக் கோள்களில் சிக்கல் மிக்க அரிய விஞ்ஞானக் கருவிகள் நிறைய இருக்கின்றன இந்தச் செயற்கைக் கோள்கள் விண்வெளிப்பாதையில் செலுத்திய ஏவுகணைகளின் பகுதிகள், சிதைந்துபோன உறுப்புகளே, விண்வெளியில் ஓடிக் கொண்டிருக்கும் வேறு சில பொருள்கள். இவை காலப்போக்கில் விண்வெளிப் பாதைகளைத் தேடிப்பிடித்து ஓடத் தொடங்கியவை

கருவிகள் நிறைந்த செயற்கைக் கோள்களில் சில இப்பொழுது இயங்கவில்லை. ஆயினும் அவை பல ஆண்டுகளுக்கு விண்வெளிப் பாதைகளில் போய்க் கொண்டுதான் இருக்கும். சில செயற்கைக் கோள்கள் இன்னும் தகவல் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இந்தத் தகவல்கள் வானிலையை முன்கூட்டி அறிவிப்பதற்கும், கப்பல், விமானப் போக்குவரத்துக்கும், நில உலகின் மேற்பரப்பைப் பற்றிய கணக்கீட்டுக்கும் இன்னும் பல பயனுள்ள துறைகளுக்கும் உதவி செய்கின்றன. வால்டர் ஃபோலா என்ற விஞ்ஞானி இத்தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

---

## நீருக்கடியில் வாழ்வதற்கு வீடுகள்

பெருகி வரும் ஜனத்தொகைக்கு நிலத்தில் வீடுகள் கட்டிப்போதாமலிருக்கும் என்ற எண்ணத்திலோ என்னவோ இப்போது நீருக்கடியில் வீடுகளைக்கட்டுவதில் சோவியத் விஞ்ஞானிகள் முயன்று வருகின்றனர்.

நீருக்கடியில் மனிதன் ஜீவிக்கமுடியுமா? பணியாற்றமுடியுமா? ஆம் என்றுமுடிவுசொல்கிறது ஆராய்ச்சி. கடலினதும் சமுத்திரத்தினதும் ஆழத்தில் செறிந்து கிடக்கும் செல்வமந்தனையும் மீன் தாவரம், கனிவகைகள்- மனிதனின் உடமையாகும் மனிதனின் நல்வாழ்வுக்கு இந்த நன்கு பயன்படுத்தலாமாம்.

---

## 'பூனையைப் பார்த்துப் பழகுங்கள்'

பூனையின் நடமாட்டங்களை அவதானித்து அதன்படி பல தேகப்பயிற்சிகளைச் செய்து வருவதால் யுவதிகள் தமது உடலமைப்பை செப்படுத்தலாம் என பிரபல ஆங்கில நடிகை ஆன்மாரி இறட் ஆலோசனை கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பகுதி

## பாடசாலைகள் 'ஹாக்கி போட்டி: யாழ். கோஷ்டியின் விபரம்

யாழ்ப்பாணம், வியா இம்மாதம் 27ந் தேதி முதல் 30ந் தேதிவரை கொழும்பில் நடைபெறும் பாடசாலைகள் ஹாக்கிப் போட்டிகளில் கலந்து கொள்ளும் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கோஷ்டியின் வீரர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

### 20 வயதுக்கு உட்பட்டவர்கள்

எஸ் சுதேசநாதன் - காப்டன் (கனகரத்தினம் ம ம வி), எஸ். சிறினிவாசன் (மகாஜனு) எவ். வேதநாயகம் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), கே. புண்ணியமூர்த்தி (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), எஸ். விஜயகுமார் (மகாஜனு) வி. ஜோதிலிங்கம் (யாழ்ப்பாணக்கல்லூரி), பி. பத்மநாதன் (மகாஜனு), டி. சத்தியதேவா (யாழ். மத்திய கல்லூரி), எம். வாமராஜா (மகாஜனு), என். ஜெயரத்தினம் (யாழ் மத்தியகல்லூரி), கே. கிருஷ்ணலிங்கம் (யாழ் மத்தியகல்லூரி), ஜே. பிரகாசம் (யாழ் மத்தியகல்லூரி), ரி. யோகேஸ்வரன் (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), சி. அம்பிகைபாகன் (சென் ஜோன்ஸ்), ரி. சிறிகாந்தன் (மகாஜனு) ஜே. ஜேக்கப் (யாழ் மத்திய கல்லூரி), சி. செல்வராஜா (கனகரத்தினம் ம. ம. வி.)

### 17 வயதுக்குட்பட்டவர்

எஸ். ஜேசுதாசன் (யாழ். மத்திய கல்லூரி), என். சிவபாதசுந்தரம் (மகாஜனு), எஸ். ராஜு (யாழ்ப்பாணக் கல்லூரி), எம். விஜயகுமார் (யாழ். மத்திய கல்லூரி), சி. சண்முகம் (யாழ்ப்பாணக் கல்லூரி), கே. சிவக்குமார் காப்டன் (மகாஜனு), டி. ரவீந்திரநாதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஜி ஹரிதாசன் (யாழ்ப்பாணக் கல்லூரி), கே. சாந்திஹரன் (யாழ். மத்திய கல்லூரி), எஸ். எஸ். ராஜகுமார் (மகாஜனு), கே. தர்மகுலசிங்கம் (கனகரத்தினம் ம. ம. வி.), எம். கலீக் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஆர். அம்பலவாணர் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி). என் சி. பத்மநாதன் (யாழ். மத்திய கல்லூரி), எம் இம்லு (யாழ்ப்பாணக் கல்லூரி), எஸ் விஸ்வேஸ்வரராஜா (மகாஜனு), ஜி, பொனி (யாழ்ப்பாணக் கல்லூரி). கே ஜெயசுந்தரம் (அருணோதயா).

## புதிய நிர்வாகிகள்

பரந்தன், புதன்

பன்னைக்கட்டிப் பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் காரியதரிசி திரு. த, செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஆ. இராசையா, உபதலைவர்: திரு. க காசிலிங்கம். தனாதிகாரி: திரு. வி. கே. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: திரு. த, செல்லத்துரை. பதினொரு பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் திரு. இராசையா பேசுகையில் கோவிலின் திருப்பணி வேலை பல ஆண்டுகளாக நிறைவேறுதிருப்பதால் மக்கள் ஒத்துழைத்து இவ்வேலையை விரைவில் பூர்த்தியாக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் திரு. கே. ஈ. கதிர்காமர் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு, க. துரைரத்தினம் (பருத்தித்துறை எம். பி.) உபபோஷகர்கள்: திரு. வேதநாயகம், திரு. கதிர்காமத்தம்பி. தலைவர்: திரு. கே. ஈ, கதிர்காமர், உபதலைவர்: திரு. எஸ். இராமநாதன். செயலாளர்: திரு. எஸ். இராஜேந்திரன். உபசெயலாளர்: திரு. எஸ். நாராயணசாமி, பொருளாளர்: திரு; சக்திவேல், கணக்குப்பரிசோதகர்: திரு. எஸ். ஞானமூர்த்தி. மற்றும் ஐந்துபேர் கொண்ட நிர்வாகசபை யொன்றும் தெரிவுசெய்யப்பட்டது,

## ஜேப்படி திருட்டு

வேலணை புதன்

மானிப்பாய் ஆஸ்பத்திரியில் இருக்கும் தனது மனைவியைப் பார்ப்பதற்காக யாழ்ப்பாணமிருந்து இ. போ. ச. பஸ்ஸில்சென்றபிரயாணியின் மணிப்போர்சும் அதனுள்ளடங்கிய 115ரூபாவும் ஜேப்படித் திருட்டுக்கு இலக்காகியது. குறிப்பிட்ட பிரயாணி காலை எட்டுமணியளவில் பிரயாணம் செய்த பொழுது பஸ்ஸில் அதிக பிரயாணிகள் இருந்தனர் எனவும் தெரியவருகிறது

வானொலி

## கொழும்பு

### வியாழன் 21 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர்

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 நேயர் விருப்பம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசைப் பாடல், 7-00 தாளவாத்தியக்கச்சேரி, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 திரையஒலிப்பதிவுகள்.

துணுக்காய்ப் பிரிவு

## கூட்டுறவாளர் தினவிழா போட்டி முடிவுகள்

மல்லாவி, புதன்

துணுக்காய்ப் பிரிவுக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினரால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கூட்டுறவாளர் தினவிழாவில் வெற்றிபெற்றவர்களுக்கு கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பரிசுகளை வழங்கினுர். விழாவுக்குத் துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம் தலைமைவகித்தார்.

பேச்சுப்போட்டி: (மேற்பிரிவு) நா. இராசமலர் கல்விளான் அ த க பாடசாலை, இ. காசிப்பிள்ளை யோகபுரம் அரசினர் தமிழ் வித்தியாலயம், இ. மங்களேஸ்வரி மல்லாவி அ த க பாடசாலை.

கீழ்ப்பிரிவு: ம. வாணி கல்விளான் அ த க பாடசாலை, சு. புவனேஸ்வரி மல்லாவி அ த க பாடசாலை, கு. செல்வநாயகம் யோகபுரம் அரசினர் தமிழ் வித்தியாலயம்.

ஆரம்ப பிரிவு: சி. கமலேஸ்வரி துணுக்காய் அ த க பாடசாலை.

சங்கீதம்: பாட்டு க அ த க பாடசாலை, கிராமிய நடனம்: துணுக்காய் அ த க பாடசாலை, அபிநயநடனம்: யோகபுரம் அரசினர் தமிழ் வித்தியாலயம், கும்மி நடனம்: யோகபுரம் அரசினர் தமிழ் வித்தியாலயம்.

## வெற்றி தோல்வியில்லை

யாழ்ப்பாணம், வியா.

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ். மத்திய கல்லூரியின் விடுதி மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகித பூர்வமான ஹாக்கிப்போட்டி யொன்று வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

போட்டியில் எப்பக்கமும் விட்டுக்கொடுக்காத காரணத்தினுல், முடிவில் ஒரு கோஷ்டியும் ஒருகோலுமே போடவில்லை. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## சைவபரிபாலன சபை 77வது ஆண்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வருடாந்தக்கூட்டத்தில் சைவசித்தாந்த கலாநிதி திரு. அ. விசுவநாதனினதும், வண்ணார்பண்ணை பிரபல பொதுநலத் தொண்டனுமாகிய டாக்டர் க. சி. சண்முகரத்தினத்தினதும் பிரிவைக்குறித்து அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மலைநாட்டில் சைவசமயப்பிரசாரம்செய்யவேண்டுமென்ற தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. த. முத்சாமிப்பிள்ளை, உபதலைவர்கள்: முதலியார் செ. முத்துத்தம்பி, திரு. சி. உ. சோமசேகரம், காரியதரிசி: திரு. ஆ. தனபாலசிங்கம், உபகாரியதரிசி: திரு. க. கணபதிப்பிள்ளை, தனாதிகாரி முகாந்திரம் இ. பொ. இராசையா, சமயப் பிரசாரப் பொறுப்பாளர்: திரு. மு. மயில்வாகனம்

## அயூப் ஆதரவு

ராவல்பிண்டி, ஜூலை 20

திருமதி இந்திராகாந்தியின் வியட்னும் கொள்கையைத் தாமும் ஆதரிப்பதாக ஜனாதிபதி அயூப்கான் கூறினர்.

## கிளிநொச்சி வாலிப முன்னணிக் கூட்டம்

கிளிநொச்சி, செவ்

கிளிநொச்சித் தொகுதி வாலிபமுன்னணியின் கூட்டம் கிளிநொச்சி எம். பி. தலைமையில் நடைபெற்றது மற்படி கூட்டத்திற்குப் பச்சிலைப்பள்ளி, பூனகரி, துணுக்காய், கரைச்சி காரியாதிகாரி பிரிவுகளிலிருந்தும் அநேக வாலிபர்கள் கலந்துகொண்டனர்.

திரு. கா. பொ. இரத்தினம் தமது தலைமையுரையில் ஜனநாயகஆட்சி தழைத்தோங்க வேண்டுமானுல் அரசியல் கட்சிகள் மிக முக்கியமென்றும், அரசியல் கட்சிகள் விழிப்புடன் இருக்க வாலிப முன்னணி, இளைஞர் இயக்கங்கள் விழிப்புடன் செயலாற்றவேண்டும் என்றும் சொன்னுர்.

கிளிநொச்சிப் பகுதிக்கு மின்சார விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: மு. சுப்பிரமணியம், துணைத்தலைவர்கள்: வ. த. அழகரத்தினம் இ. நாகேந்திரம், செயலாளர்: கா. பொ. தம்பிராசா, துணைச்செயலாளர்கள்: மா. சூ தம்பிநாயகம், கு. சிவஞானசண்முகம், பொருளாளர்: ச உருத்திரசிங்கம். 13 பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பிரிட்டிஷ் மந்திரிசபை

லண்டன், ஜூலை 20

பிரிட்டனின் பொருளாதார நெருக்கடி குறித்து திரு. வில்சனின் மந்திரிசபை நேற்று ஐந்து மணி நேரம் கூடி ஆலோசனை நடத்தியது. சூயஸ் நெருக்கடிக்குப் பின் இவ்வளவு நீண்ட நேரம் அது கூடியதில்லை.

## விண்வெளி வீரர் இன்று திரும்புவர்

கேப்கென்னடி, ஜூலை 20

அமெரிக்க விண்வெளி வீரர் மேஜர் கொலின்ஸ், தனது வான்கப்பலில் இருந்து தோளையும், தலையையும் வெளியே நீட்டி பூமியையும் நட்சத்திரங்களையும் ஒருமணி நேரம் படம் பிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

எனினும் கப்பலிலுள்ள பிராணவாயு குறைந்து வருவதால் 14 விஞ்ஞான பரிசோதனைகளை விண்வெளி வீரர்கள் கைவிடடுவிட்டதாக மேலும் அறிவிக்கப்பட்டது நாளை இரவு அவர்கள் பூமிக்குத் திரும்புகிறுர்கள்.

## இவரின் அதிர்ஷ்டம்

களுவாஞ்சிக்குடி, செவ்.


நவகிரிநகர் கிராமசபைத் தலைவர் தெரிவுக்கு இருவர் போட்டியிட்டனர். இருவரும் சமமான வாக்குகளைப் பெற்றமையால் அதிர்ஷ்டம் பார்க்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஜே. காசிநாதர் பூவா தலையா பார்த்தபோது அதிர்ஷ்டசாலி திரு. கே சதாசிவம் நவகிரி நகர் கிராமசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## விமான என்ஜினியர்கள் வேலைநிறுத்தம்?

புதுடில்லி, ஜூலை 20

ஏர்இந்தியா விமானப் பராமரிப்பு என்ஜினியர்கள் வேலைநிறுத்த முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறுர்கள். 2 என்ஜினியர்கள்மீது முறையற்ற நடத்தை காரணமாக ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாள் கொலைவழக்கு: எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியா. எழுதுமட்டுவாள் கொலை வழக்கு விசாரணையைத் தொடர்ந்து நடாத்தவேண்டிய அவசியமில்லையென ஜூரிசபையினர் நேற்று விசாரணைக்கிடையில் ஏகமனதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, நீதியரசர் எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

நேற்றைய விசாரணையின் விபரம் வருமாறு:

"முதல் வெடிச்சத்தம் கேட்டதும், எனது தகப்பனுர் 'ஐயோ' என்று குளறினுர். இரண்டாவது வெடி தீர்ந்ததும், தகப்பனுர் நிலத்தில் விழுந்தார்"

எழுதுமட்டுவாள் கொலை வழக்கில் சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் 20 வயதான மகன் கந்தையா தங்கவடிவேலு மேற்கண்டவாறு கூறினுர். இவ் வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு. தம்பையா கியூ. சி முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் 65-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ந் திகதி எழுதுமட்டுவாளிலுள்ள விடத்தல்பளை தோட்டக்காவலாளியான கந்தையாவை, விஞசித்தம்பி வடிவேலு என்பவர் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் ஏ. சிவானந்தன், புறக்டர் எம். பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராளுர். அரசாங்கத்தால் அட்வகேட் எம். சிறிநிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார்.

கந்தையா தங்கவடிவேலு சாட்சியமளித்தபோது கூறியதாவது:

இறந்தவர் எனது தகப்பனுர். மரணவிசாரணையின் போது அவரை அடையாளம் காட்டினேன். தகப்பனுர், விடத்தல்பளை சம்பாவெளி ஆகிய இரு தோட்டங்களில் காவலாளியாக இருந்துவந்தார். சம்பாவெளி தோட்டத்தில் நான் தகப்பனுருடன் வசித்துவந்தேன். சம்பவம் நடந்ததினம் இரவு 9-30 மணியளவில் தகப்பனுருடன் தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கச்சென்றேன்.

விடத்தற்பளை தோட்டத்தில்தான் சம்பவம் நடந்தது. அன்று இரவு 9 மணிக்கு சாப்பிட்டுவிட்டு தோட்டத்திற்குச் சென்ரேம். முதல் சம்பாவெளி தோட்டத்திற்குச் சென்றுவிட்டு விடத்தல்பளை தோட்டத்திற்குச் சென்ரேம். விடத்தற்பளை தோட்டத்தில் டோர்ச்லைட் அடிக்கவில்லை, 'டோர்ச்லைட் அடித்தால் திருடரைப் பிடிக்கமுடியாதெனத் தகப்பனுர் கூறினுர். தகப்பனுரிடமும், என்னிடமும் ஒரு ஆயுதமும் இல்லை. அத்தோட்டத்தில் நான்கு ஆட்டுப் பட்டிகள் அடைக்கப்பட்டிருந்தன. நாலாவது ஆட்டுப்பட்டியை பார்த்துக்கொண்டிருந்த போதுதான் சம்பவம் நடந்தது. முதல்வெடிச்சத்தம் கேட்டதும் 'ஐயோ' என்று தகப்பனுர் சத்தமிட்டார். டோர்ச்லைட்டை அடிக்கும்படி தகப்பனுர் கூறினுர், நான் பயத்தினுல் டோர்ச்லைட்டை அவரிடம் கொடுத்தேன். வெடிவந்த திக்கை நோக்கி தகப்பனுர் டோர்ச்லைட்டை அடித்தார். அப்பொழுது விஞசித்தம்பி வடிவேலு துவக்கைப் பிடித்து இலக்குப் பார்த்த

## எதிரிகள் மூவரும் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன் அடித்துப் படுகாயப்படுத்தியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் விசாரணையின்பின் எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் நல்லூர் அரசடியைச் சேர்ந்த சரவணை பாலசுந்தரம், சரவணை சற்குணம், முருகேசு தெய்வேந்திரம், ஆகியோர் சுப்பர் மூத்தரை அடித்துப் படுகாயப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜராளுர்.

(முதல் கட்டுரையின் தொடர்ச்சி:) படி தகப்பனுரை நோக்கியபடி இருந்தார். எதிரிக்குப் பின்னுல் மற்றும் இருவர் நின்ருர்கள். எதிரியைமூன்று வருடகாமாக எனக்குத் தெரியும். இரண்டாம் வெடி தீர்ந்ததும் தகப்பனுர் நிலத்தில் வீழ்ந்தார். டோர்ச்லைட் வெளிச்சமும் அணைந்தது. எதிரியும் மற்றவர்களும் ஓடிய சத்தம் கேட்டது.

## எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன் சங்கிலியை திருடமுயற்சித்ததாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம்விசாரணையின் பின் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ் வழக்கில் கோப்பாயைச் சேர்ந்த சின்னட்டா சண்முகம் என்பவர் சுப்பிரமணியம் வள்ளியம்மையின் 450 ரூபா பெறுமதியான சங்கிலியை திருடமுயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜராளுர்.

## பைரேட்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், வியாழன் பாஷையூர் அர்ச் அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'ஏ' பிரிவுக்கான உதை பந்தாட்டச் சுற்றுபோட்டியில் நேற்று பாஷையூர் அர்ச். அந்தோனியரர் விளையாட்டுக் கழக மைதானத்தில் பைரேட்ஸ் செவின் கோஷ்டியும் செவின் ஹீரோஸ் கோஷ்டியும் மோதிக்கொண்டன.

விளையாட்டு முடிவில் பைரேட்ஸ் செவின் 2 கோல்களால் செவின் ஹீரோஸை வென்றது.

மத்தியஸ்தராக திரு. ஏ செபஸ்தியாம்பிள்ளைகடமையாற்றினுர்.

# சாட்சிகள் முரண்படுவதாக வழக்கறிஞர் வாதம்

## நிச்சாமம், பெண் கொலைவழக்கில் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், புதன் "சம்பவதினம் சந்தேக நபர் காலம் சென்றவரை கையாலும் காலாலும் ஓட ஓட துரத்தித் துரத்தித் தாக்கினுர். அவர் விழுந்ததும் மிதித்தார்"

சங்கானை கிழக்கைச்சேர்ந்த நிச்சாமம் என்னும் பகுதியில் உள்ள 26 வயது நிரம்பியசின்னத்தம்பி சரஸ் என்னும் பெண்ணின் மரணம் சம்பந்தமான மேல் விசாரணை தொடர்ந்து மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் நடைபெற்ற பொழுது காலம் சென்றவரின் தாயாரான கணபதி கைம்பெண் நாகமுத்து சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினுர்.

சந்தேக நபர் சார்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராளுர். பொலிஸ் தரப்பில சப் இன்ஸ்பெக்டர் திரு. மெண்டிஸின் உதவியுடன் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரன் ஆஜராளுர்

திருமதி நாகமுத்து சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: "சம்பவத்தினம் மாலை காலம் சென்றவரை சந்தேக நபர் காலால் அடித்ததும் மகள் விழுந்து விட்டார். விழுந்ததும் சந்தேகநபர் அவரை ஏறி மிதித்து அடித்தார். அவர் எழும்பி வீட்டைச் சுற்றி ஓட இவர் அவரைத் துரத்திக் கையாலும் காலாலும் அடித்தார். பின் பனையில் ஏறிய சந்தேக நபர் இறங்கி வந்ததும் காலம் சென்றவரை மீண்டும் அடித்தார். அவர் அடுத்த பனையில் ஏறியதும் மகள் வீட்டிற்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டு உள்ளுக்குள் நின்ருர். சந்தேக நபர் பனையால் இறங்கியதும் போய் கதவைத் திறக்கும்படி கதவின் மேல் உதைநதார். கதவு திறக்கப்பட்டதும் இருவரும் அறைக்குள் சென்ருர்கள். அங்கு அடிக்கும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சந்தேகநப அறைக்கு வெளியில் வந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு போய் விட்டார். நான் போய் பார்த்த பொழுது மகள் இறந்து கிடந்தார்.

சந்தேக நபர் எனது மகளை விவாகம் செய்திருந்தார். அவர் எனது இளைய சகோதரியின் மகள் தவமணியை ஆசைநாயகியாக வைத்திருக்கிருர். அவர்களுக்கு ஒரு பிள்ளையும் உண்டு. நான் மகளின் மரணம் சம்பந்தமாக சந்தேகப் படுகிறேன்",

சங்கானைப் பட்டினசபை அங்கத்தவர் திரு. மா. கணேசுவும் சாட்சியமளித்தார்.

இந்த நிலையில் சந்தேக நபரின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரெத்தினம் நீதிபதியிடம் பிரேத பரிசோதனை செய்த டாக்டரின் அறிக்கையின் படி காலம் சென்றவர் இரவு 11 மணிக்கும் 1 மணிக்குமிடையில் இறந்திருக்க வேண்டும் என்றும் அவரின் உடலில் வெளிக் காயங்கள் இல்லையென்றும் கூறியுள்ளார். ஆனுல் நாகி, நாகமுத்து, பொன்னன் முதலானேர்களின் சாட்சியத்தின் படி காலம்சென்றவர் மாலை 6 மணிக்கு முன் இறந்திருக்க வேண்டும். அத்துடன் சாட்சிகள் காலம் சென்றவர் கையாலும் காலாலும் தாக்கப்பட்டதாகக் கூறுகிருர்கள் ஆனுல் வெளிக் காயம் இல்லை. இந்த மரண விசரரணையில் சாட்சியமளித்தவர்களின் சாட்சியங்கள் ஒன்றுக் கொன்று முரணுகவுள்ளது. இக்காரணங்களால் சந்தேக நகருக்கு எதிராக கொலைக் குற்றம் [illegible] முடியாது என்று கூறினர்.

சந்தேக நபர் சார்பில் ஆஜரான வழக்கறிஞரின் வார்த்தை ஏற்ற நீதிபதி சந்தேக நபரை விடுதலை செய்து காலம் சென்றவரின் மரணம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# வகுப்பு துவேஷத்தை தூண்டிவிட முயன்ருராம்

## ஆசிரியர் மீது வழக்கு

கொழும்பு, புதன் மகாராணியின் பிரஜைகளுக்குள் மனக்கசப்பை அல்லது வெறுப்பைத் தூண்டக்கூடியவகையில் முயற்சி மேற்கொண்டதாக ஆசிரியர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மத்துகம மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்குக்கு மத்துகம பொலிஸார் அட்டோர்னி ஜெனரலிடமிருந்து எழுத்துமூலமான அங்கீகாரம் பெற்றுள்ளார்கள்.

மத்துகம சென். மேரீஸ் கல்லூரி ஆசிரியரான மலவாராச்சி சிறிசேன என்பவர் தமிழ்மொழி உபயோக விசேஷ விதிகள் மசோதா கடந்த ஜனவரி 8-ம் திகதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப் பட்டபோது மகாராணியின் பிரஜைகளுக்குள் வகுப்பு துவேஷத்தைத் தூண்டி அமைதியைக் குலைக்க முயன்றதாக இந்தவழக்கு தொடரப்பட்டுள்ளது.

'நாங்கள் தமிழர்களுக்கு எமது நாட்டை விற்க முடியாது. தமிழர்கள் கொல்லப்பட்டு கழுத்துறைக் கடலுள் தூக்கி எறியப்படவேண்டும் அவர்களுக்கு என்னசெய்யப்பட வேண்டும் என்பது பற்றிய அறிவித்தல் மாலையில்வரும் வரை தயாராக இருங்கள்' என மேற்படி ஆசிரியர் ஜனவரி 8-ம் திகதியன்று கூறினுராம்.

## தி. மு. க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மேலும் பேசுகையில், கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த எம். பி. முகமது அலிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் நிலவவில்லை என்ருர்.

பிறகு சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை செனட்சபையில் நிறைவேறியது.

செனட்டர்கள், எம். ஸி. பி. பீரிஸ், டொரிக்டி சொய்ஸா முதலானவர்களும் பேசினுர்கள்.

## செப்டம்பர் 12-ல் புதியஅரிசிக்கூப்பன்

கொழும்பு, வியாழன் இலக்கம் 23ஐக் கொண்ட புதிய அரிசிக் கூப்பன் புத்தகங்கள் செப்டம்பர் 12ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவிருக்கிறது.

கடைசி நிமிடம்வரைகாத்திராது, முன்னதாகவே தமது கூட்டுறவுப் பண்டகசாலைகளிடமிருந்து புதிய அரிசிக்கூப்பன் புத்தகங்களைப் பெறுமாறு உணவுக் கட்டுப்பாடு இலாகா பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை வம்சாவளியினரல்லாதோருக்கு அடையாள அட்டைகளும், விசேஷ அரிசிக் கூப்பன் புத்தகங்களும் விநியோகிப்பதில் உணவுக் கட்டுப்பாடு இலாகா தனது முழுக்கவனத்தையும் செலுத்து மாதலால், இப்போது தமது அரிசிக்கூப்பன் புத்தகங்களைப் பெறத்தவறுவோர் பிறகு அவற்றைப் பெறுவது கஷ்டமாகவிருக்குமென உணவுக் கட்டுப்பாடு இலாகா உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா..,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணைமீது திரு தொண்டமான் பேசினுர்.

அமெரிக்கர்கள் எல்லாரும் தினம் ஒரு கோப்பை தேனீர் அருந்த ஆரம்பித்தால் அமெரிக்கர்கள் கொடுக்கும் எல்லாவித உதவிகளையும் விட இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு போதுமான பணம் கிடைத்து விடும் என்று அவர் குறிப்பிட்டார்.

தேர்தல் என்னவோ சமீபத்தில் நடக்கப் போவதாகத்தான் எதிர்க்கட்சியினர் நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். கடந்த ஆண்டுதான் தேர்தல் நடந்து இருக்கின்றது. அரசாங்கத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவதிலேயே அவர்கள் முனைந்து இருக்கிருர்கள் இதனுல் நாட்டின் முன்னேற்றத்துக்கும் தடையாக விருக்கிருர்கள். ஒரு சமயத்தில் ஒருவர் தான் பிரதம மந்திரியாக இருக்க முடியும், ஒரே சமயத்தில் எல்லாருமே பிரதமர்களாக இருப்பது சாத்திய மில்லை. அரசாங்கத்தை ஆதரிப்பீர்களானுல் உங்களுக்கு ஒரு தினம் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கலாம், என்று அவர் சொன்னுர்.

### அஸீஸ் மீது தாக்குதல்

திரு. தொண்டமான் தோட்டங்களில் தற்போது நடைபெற்று வரும் வேலை நிறுத்தங்கள் பற்றி பேசும்போது ஜ. தொ. காங்கிரஸ் தலைவரை வன்மையாகக் கண்டித்தார்.

அவர் மேலும் கூறியபோது: நான் வெளிநாட்டில் இருக்கும் போதுதான் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இரண்டு வாரங்களுக்குப் பிறகு நான் நாட்டுக்குத் திரும்பியதும் என்னை முதலாளி வர்க்கத்தினர் என்று பலர் கிண்டல் செய்தார்கள். நான் பிச்சைக்காரன் இல்லை தான். நான் ஓரளவுக்கு பெறுமதியானவன். ஆனுல் நான் தொழிற் சங்க இயக்கத்தில் இறங்கியிருப்பதால் எனது தகுதி பன்மடங்கு உயர்ந்துள்ளது. ஆனுல் புறக்கோட்டையில் ஒரு குமாஸ்தாவாக வாழ்க்கை ஆரம்பித்து இரண்டு ஸ்தாபனங்களுக்கு டைரக்டராக மாறியுள்ள அந்த மற்றவரின் நிலைமை அப்படியானதல்ல.

திரு. வெஸ்லிகுணவர்தன உட்பட பலரும் பேசினுர்கள்.

## லொறி, ஜீப் விபத்துக்கள்

### 4 பேர் பலி

கொழும்பு, வியாழன் மதவாச்சி சந்திக்கு அரை மைல் தூரத்தில் மன்னுர் மதவாச்சி வீதியில் லொறியொன்றுபாதை விலகிஓடியதால் ஏற்பட்ட விபத்தில் இந்த லொறியில் வந்து கொண்டிருந்த இருவர் கொல்லப்பட்டனர். இந்த இடத்துக்குவெகுசமீபத்தில் 48மணி நேரத்துக்கு முன் ராணுவ ஜீப் ஒரு விபத்துக்குள்ளாகியதால் இருவர் கொல்லப்பட்டனர்.

## லட்சார்ச்சனை

அளவெட்டி, வியாழன் அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயிலில் லட்சார்ச்சனை நாளை ஆரம்பமாகி 32 நாட்களுக்கு நடைபெறும். கடைசித்தினத்தன்று சங்காபிஷேகமும் அன்னதானமும்நடைபெறும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org